OCTOBER 1871. VOL. II. NO. 2.

# கிறிஸ்தோபகாரி.

THE

# Christian Friend:

## A Tamil Quarterly Magazine.

CONTENTS:


| | | பக்கம். |
|---|---|---|
| பெத்லகேம் - - - - | Bethlehem. - - - - - | 25 |
| யாழ்ப்பாணத்திலுள்ள சார்ச்சு மிசியோன் சரித்திரப்பொழிப்பு - | Brief Sketch of the Church Mission in Jaffna. - - - | 28 |
| இந்துசமையத் தற்கால நிலைபரம் | Modern Aspects of Local Hinduism. | 31 |
| சிறுபிள்ளையின் பிரார்த்தனை - | Answer to a Child's Prayer. - - | 33 |
| ரோமான்மார்க்கம் - - - | Romanism. - - - - | 35 |
| பாலர்பாலனம் - - - | Training of Children. - | 40 |
| ஞாபகப்பத்திரம் - - - | In Memoriam. - - - | 42 |
| வேதமகத்துவம் - - - | Excellency of the Bible. - - | 44 |
| சமாசாரத்திரட்டு - - - | Summary of Religious Intelligence. | 45 |


Jaffna.
Printed for the Jaffna Religious Tract Society.
BY STRONG & ASBURY.
1871.

பெனிசு மூன்று. Three Pence.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதத்திற் சொல்லப்பட்டிருக்கும் யேசுக்கிறிஸ்துவி
# நாமங்களும் இலட்சணங்களும்.

"அவைகளுமே என்னைக்குறித்துச் சாட்சியிடுகின்றன." யோவா. 5 : 39.

அதற்குச் சீமோன்பேதுரு நீர் சீவனுள்ள தேவனுடையகுமாரனுகி
கிறிஸ்து என்றான். மத். 16 : 16.

| | |
|---|---|
| குமாரன், | க. யோவா. 4 : 1 |
| தேவனுடைய குமாரன், | யோவா. 1 : 3 |
| சீவனுள்ள தேவனுடைய குமாரன், | மத். 16 : 1 |
| ஒரேபேருன குமாரன், | யோவா. 3 : 1 |
| தேவனுடைய ஒரேபேருன குமாரன், | யோவா. 3 : 1 |
| பிதாவின் குமாரன், | 2 யோவா. வ |
| பிதாவுக்கு ஒரேபேருனவர், | யோவா. 1 : 1 |
| பிதாவின் மார்பிலுள்ள ஒரேபேருன குமாரன், | யோவா. 1 : 1 |
| சகல சிருஷடிகளுக்கும் முதன்மை, | கொலோ. 1 : 1 |
| தம்முடைய சொந்தக்குமாரன், | உரோ. 8 : 3 |
| சுதன் அருளப்பட்டார், | எசா. 9 : |
| ஒரே அன்பான குமாரன், | மாற். 12 : |
| என் சுதன், | சங்கீ. 2 : |
| அன்பானவராகிய குமாரன், | கொலோ. 1 : 1 |
| சருவத்திற்கும் மேலானவருடைய குமாரன், | லூக். 1 : 3 |
| ஸ்தோத்திரிக்கப்பட்டவருடைய குமாரன், | மாற். 14 : |

நமக்கு ஒருபாலகர் பிறந்தார்; நமக்கு ஒருசுதன் அருளப்பட்டார்; * *
அவருடையநாமம் அற்புதமானவர், ஆலோசனைக்காரர், வல்லமையுள்ள தே
வன், நித்தியபிதா, சமாதானபிரபு என்னப்படும். எசா. 9 : 6.

என் அன்பானகுமாரன், மத். 17 : 5. - பிதாவாகிய தேவன்
நான் தேவனுடையகுமாரன், யோவா. 10 : 39. - யேசுதாமே
தேவனுடைய குமாரன், மாற். 1 : 1. - வாக்கை அருளின தேவாவி
தேவனுடையகுமாரன், லூக். 1 : 35. லூக். 2 : 11. - காபிரியேல்
இவரே தேவனுடைய குமாரன், யோவா. 1 : 34. யோவான் ஸ்நானன்
தேவனுடையகுமாரனுகிய கிறிஸ்து, யோ. 20 : 31. - அப். யோவான்
கிறிஸ்துதேவனுடைய குமாரன், அப். 9 : 20. - அப். பவுல்
நீர் தேவனுடைய குமாரன், மத். 14 : 33. - சீஷர்
இரபீ, நீரே தேவனுடையகுமாரன், யோவா. 1 : 49. - நாதான்வேல்
தேவனுடைய குமாரனுகிய கிறிஸ்து, யோவா. 11 : 27. - மார்த்தாள்
யேசுக்கிறிஸ்து தேவனுடைய குமாரன், அப். 8 : 37. - அண்ணகன்
மெய்யாக இவர் தேவனுடையகுமாரன்,
மாற். 15 : 39. நூறுசேவகருக்கதிபதி
நீர் தேவனுடைய குமாரன், மாற். 3 : 11. - அசுத்த ஆவிகள்
சருவத்திற்கும் மேலான தேவனுடைய குமாரன்,
மாற். 5 : 7. - பிசாசுபிடித்தவன்,


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

DANIEL POOR LIBRARY
JAFFNA COLLEGE
-2 OCT 2003
VADDUKODDAI

# கிறிஸ்தோபகாரி.

# THE CHRISTIAN FRIEND.

Vol: II, No. 2. ஐப்பசி மாதம், 1871.



BETHLEHEM.

## பேத்லகேம்.

தற்காலத்திலும் பேத்லகேம் என்னும் நாமத்தைக்கொண்டு அழைக்கப்படும் இப்பட்டினம் யெருஷலேமுக்குத் தெற்கே ஆறுமைல் தூரத்தில் ஒரு மேட்டின்மேற் கட்டப்பட்டிருக்கிறது. அது எப்ருத்தா என்றும் அதில்வாசம் பண்ணுங் குடிசனங்கள் எப்ருத்தியர் என்றும் அழைக்கப்படுவதுமுண்டு. (ஆதி. ௪௮ : ௭. மீகா. ௫ : ௨) இவ்வூரில் ரூத். போவஸ் என்பவர்கள் வாசம்பண்ணினார்கள். தாவீதிராசனும், அவன் சுற்றத்தாராகிய யோவாப் அபீஷாய், அசாகேல் என்பவர்களும் இப்பட்டினத்திற் பிறந்தார்கள். ரெகோபேயாம் இந்நகரத்தை அரணாக்கினான். (௨. நாளா. ௧௧ : ௬) விசேஷமாய் உலக இரட்சகராகிய யேசுநாதர் இதிலே பிறந்ததினால் உலகத்திலுள்ள எந்த இடத்திலும் இதுவே யெருஷலேமுக்கு இரண்டாவதான சிரேஷ்டமுடையது. இது கட்டப்பட்டிருக்கும் மலைச்சிகரம் யெருசலேம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டப்பட்டதிலிருந்து 60 அடி அல்லது நாற்பதுமுழ உயரமானது. அதை எந்தத்திசையினின்று பார்த்தாலும் அதின் காட்சி கவனிக்கப்படத்தக்கது. இந்நகரத்திலுள்ள வீடுகள் அப்பகுதியிற் திரளாயிருக்கும். சுண்ணாம்புக் கற்களாற் கட்டப்பட்டிருக்கின்றன. அவைகள் வைரமானவைகளாயிருந்தும், அநேகம் இப்போ இடிந்து, தகர்ந்து, குடியில்லாதவைகளாயிருக்கின்றன. சில வீடுகள் கூரைகளில்லாதிருக்கச் சிலவீடுகள் சுவர்கள் சேதப்பட்டிருக்கின்றன. தெருக்கள் ஒடுக்கமானவை.

இப்பட்டினத்தில் நாலாயிரம்பேர்வரையிற் குடியிருக்கிறார்கள். அவர்கள் யாவருங் கிரேக்கக் கிறிஸ்தவர்கள். முன்னே அங்கே குடியிருந்த மகமதியச் சனங்கள் 1834 ம் ஆண்டு உண்டுபட்ட ஓர் கலகத்தினிமித்தம் இபிராகிம் பாச்சா (Ibraham Pasha) வினால் அவ்வூர்விட்டுத் துரத்தப்பட்டார்கள். அவர்கள் வீடுகளெல்லாம் அப்பொழுதே இடிக்கப்பட்டன. இப்போ இருக்கிறவர்கள் மிக முரட்டுச் சனங்கள். இவர்களில் அநேகர் இடையர். இப்பட்டினத்தின் நிலைபரத்தைப் பார்க்கும்பொழுது, அது, முற்காலத்திலிருந்த தாவீதையும், அவன் இனத்தாரையும் போலத் தயிரியமும் வலிமையுமுள்ள வீரவான்கள் தோன்றத்தக்க இடமாயிருக்கிறது. அது யூதாவின் மலைநாட்டிலுள்ள உயரமான பகுதியிற் கட்டப்பட்டு, அதிலிருந்து கிழக்கே சாக்கடலுக்கும் மேற்கே பெலிஸ்தியாவுக்கும் போக ஆழமும் இடுக்கமுமான இறக்கங்களுள்ளதாய் இருக்கிறதினால் இந்நகரவாசிகளாகிய இடையருக்கு அப்பகுதியிலுள்ள காட்டுப் பள்ளத்தாக்குகளில் இருக்கும் சிங்கங்களாலும், கரடிகளாலுமன்றி, மேற்கேயிருந்த பெலிஸ்தியராலும், கிழக்கேயிருந்த அராபியக்கள்வராலும் பெரும் இடைஞ்சல்களிருந்தன. ஆதலால் அவர்கள் சிறுபராயந் தொடங்கி இராப்பகல், இளைப்பு, பசி, உட்டணம், சீதளம் இவற்றைத் தாங்கமாத்திரமல்ல, எவ்வகை மோசங்களையுஞ் சகிக்கவும், எப்பேர்ப்பட்ட சத்துருக்களையும் எதிர்க்கவும் இயன்றவர்களாய்ப் பழகவேண்டியிருந்தது. இவ்வாறு தாவீது சிறுபராயத்திற் தன் பிதாவின் ஆடுகளை மேய்த்துக்கொண்டிருந்தபொழுது கவணெறிந்துபழகினதாலும், கரடிகள் சிங்கங்களின் வாயிலிருந்து ஆடுகளைத் தற்காத்துப் பழகினதாலும் சிங்கம்போலும் கோலியாத்து முதலான வீரவான்களை யுத்தகளங்களிலே முகாமுகமாய் எதிர்த்துச், செயங்கொள்ள வல்லவனானான். (௧. சாமு. ௧௭: ௩௪—௩௬) பிரயாணிகள் தற்காலத்திலும் இந்நகரத்தைச் சுற்றியிருக்கும் மேடுகளிலே திரளான ஆட்டுமந்தைகளைக் காண்கிறார்கள். அவைகளையும், அவைகளை மேய்க்கும் இடையர்களையுங் காணும்பொழுது பூர்வீககாலத்திலிருந்த வாலிப இடையனாகிய தாவீதும், இரட்சகரின் பிறப்பைத் தேவதூதர் கூறக்கேட்ட இடையரும் உடனே அவர்கள் ஞாபகத்தில் வருகிறார்கள். வேளாண்மைகாலத்தில் வயல்வெளிகளில் அரிகாரர் நின்று அரிகளை அறுக்க அவர்கள் பிறகாலே கூட்டங்கூட்டமாய் ஸ்திரிகளும், பிள்ளைகளும் நின்று போவசின் வயலில் ரூத் பொறுக்கினதுபோல, சிந்தின அரிகளைப் பொறுக்குவதை இந்நாளிலுங் காணலாம். ரூத் தான் பொறுக்கின கதிர்களைத் தட்டி அடித்தாற்போலச் சாயங்காலத்திலே ஸ்திரிகளுங், கன்னிகளும் வயல்களிற் தாங்கள் பொறுக்கினவற்றைத் தெருவோரங்களில் வைத்துச், கல்லுகளால் அல்லது தடிகளாற் தட்டுவதை மாத்திரமல்ல, அரிகாரர் வயலில் ஓரிடத்திற்கூடி ஆகாரத்தை எடுத்துக் காடியிலே துணிக்கையைத் தோய்த்துப் புசிக்கிறதையும், வறுத்த கோதுமையைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புசிக்கிறதையும் இந்தக் காலத்திலுங் காணலாம். (ரூத். ௨ : ௧௪.) போவஸ் தன் வயல்நிலத்திற் காவலிருந்தாற்போலக் கமக்காரர் இப்பொழுதுந் தங்கள் களங்களிற் படுப்பார்கள். கமக்காரர் மாத்திரமல்லச் சிலபோது முழுச் சமுசாரத்தாருமாய் வயல்வெளிகளிற் போய் அருவி வெட்டி முடியும்வரைக்கும் தங்குதலும் அபூருவமல்ல. வாற்கோதுமை இந்நாளிலும் அவ்வூரிலுள்ள ஏழைகளுக்கு ஆகாரமாயிருக்கிறது. போவஸ் கொடுத்த ஆறுபடி கோதுமையை வாங்குப்படி ரூத் தன் முக்காட்டுச்சீலையைப் பாவித்தாற்போலவே அந்நாட்டில் இக்காலத்திலும் தங்கள் முக்காடுகளை இதற்காய்ப் பாவிப்பார்கள்.

இரட்சகர் பிறந்த இடம் இதுதான் என்று ஒரு கெபியை அவ்வூரிற் காட்டுகிறார்கள். உலக இரட்சகராகிய யேசு பிறந்த இடம் இந்தக் கெபிதானென்று நாம் நிச்சயப்படுத்திப் பேசாதபோதும் தீர்க்கதரிசனப்படியும் தேவவாக்கின்படியும் இந்த ஊரிலேயே அவர் பிறந்தார் என்பதில் அணுவளவும் ஐயமில்லை.

இரட்சகர் பிறந்த இடத்திலிருந்து அறுபது மைல் தூரத்தில் அவர் மாதா வாசம்பண்ணியபோது எழுநூறு வருஷங்களின் முன் சொல்லப்பட்ட தீர்க்கதரிசனவாக்கு (மீகா. ரு : ௨.) நிறைவேறும்பொருட்டு அதைக்குறித்து அறியாதவனும் நினையாதவனுமாகிய ஒரு ரோம ராசனால் அவள் சரியான காலத்தில் அவ்விடத்துக்கு வரக் கட்டளையிடப்பட்டாள்.

ஆம், பேத்லகேமூரிற்றானே மகிமையின் தேவன் மனுரூபமாய்ப் பிறந்தார். அவர் பிறந்த இடத்திற்குச் சமீபமான மைதானங்களில் இடையர் ஆடுகளைக் காவல்பண்ணும்பொழுது, தேவதூதன் அவர்களுக்குத் தோன்றக், கர்த்தருடைய மகிமை அவர்களைச்சுற்றிப் பிரகாசிக்க, உலக இரட்சகராகிய யேசுவின் சனனம் அவர்களுக்குத் தெரிவிக்கப்படச், சடுதியிற் பரம சேனைகள் திரளாக அவர்களுடன் சேர்ந்து, "உன்னதங்களிலுள்ள தேவனுக்குப் புகழ்ச்சியும், பூமியிலே சமாதானமும், அனுக்கிரகமுமுண்டாகக்கடவன" என்று சொல்லித் தேவனைத் துதித்துக் கொண்டாடின சருவலோக சம்பவங்களிலும் அதிசயமான இந்தச் சம்பவம் இந்தப் பேத்லகேமிற்றான் சம்பவித்தது. உலகத்தின் எந்தப் பகுதிகளிலும் கிறிஸ்துவே இரட்சகர் என்று ஏற்றுக்கொண்ட இலட்சக்கணக்கான சனங்கள் இந்த யேசுவே கிறிஸ்து, இவரே தேவகுமாரன், இவரில் விசுவாசமாயிருக்கிற யாவரும் இவர் நாமத்தினால் நித்திய சீவனை அடைவார்கள் (யோவா. ௨௦ : ௩௧.) என்று சாட்சியிட, இந்தப் பேத்லகேமும் இந்நாள்வரையிலும் இச்சத்தியத்திற்குச் சாட்சியாய் நிற்கின்றது.

W. W. H

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## BRIEF SKETCH

## OF THE CHURCH MISSION IN JAFFNA

## யாழ்ப்பாணத்திலுள்ள சார்ச்சு மிசியோன் சரித்திரப் பொழிப்பு.

மேலைச்சங்கிலையிற் சொல்லப்பட்ட சாமுவேலென்பவன் • எளியசாதியிற் பிறந்தவனாயிருந்தும் விக்கிரகாராதனையில் மகா பக்திவயிராக்கியமுள்ளவனும் தன் சாதிசனத்தாருக்குள் பேயாராதனையில் பேர்போன தலைவனுமாயிருந்தான். இவன் துட்டதேவதைகளின் உக்கிரகோபத்தையாற்றும்படி பொங்கல், பூசை முதலியவைகளைச்செய்து பற்பலசமயங்களிலும் சன்னதங்கொண்டாடுகிறதுமன்றி, பிள்ளையார்கோவிலுக்கு நேர்த்திக்கடன்பண்ணி, அநேக பிராமணர், பண்டாரங்களுக்கு அரிசி, காய், கனி முதலான காணிக்கைகளை வருஷாந்தரம் கொடுத்துவருகிறதும் வழக்கமாயிருந்தது. மேலும் அவன் பிள்ளையார்கோவிலுக்கு ஒரு பசுமாட்டை நேர்ந்துகொடுத்து, அதைத் தன்வீட்டிற்றானே விட்டுப், பராமரித்து நாடோறும் அதன் பாலைக் கோவிற் பூசாரிமாருக்கு அனுப்பிவந்தான். இதுவுமன்றித் தன் மனையக்களுக்குச் சுகவீனமானகாலத்தில் சுத்தவானரின் தயவைப் பெறும் நோக்கமாய் யாழ்ப்பாணத்திற்குக் கிழக்கே இருபதுகட்டை தூரத்திலிருக்கும் கிளாலியென்னுமிடத்திலுள்ள பெயர்போன ரோமான்கத்தோலிக்க கோவிலுக்கு நேர்த்திக்கடன் செய்து அங்கே வருஷாவருஷம் போக்குவரவுபண்ணி, சந்தியோகுமையோருக்குக் காணிக்கையாக ஒரு வெள்ளிப்பட்டையத்துடன் பரிசையையும், அக்கோவிற்சுவாமியார்வசம் ஒப்பித்தான். இப்படி அஞ்ஞான அந்தகாரத்திலும் பாப்புமார்க்க அவபத்தியிலும் நிறைந்தவனாகிய இவன் நல்லூரில் வாசம்பண்ணின கனம்பொருந்திய (எற்லி) ஐயரவர்களுக்குக் குதிரைப்பாகனுமாயேற்பட்டான். தொடக்கத்திற் சுவிசேஷபோதனையைக் கேட்கும்போதெல்லாம் வெறுப்புக்காட்டி, அதற்கு விரோதியாயிருந்தும் கடைசியாக அப்போதனையை நாடோறும் கேட்டுவந்ததினால் அஞ்ஞான அவபத்தியிற் சற்றே வெறுப்படைந்து மனவிருள் நீங்கச்—சுவிசேஷவொளியானது அவனிதயத்திற் றுலங்கிப் பிரகாசிக்க அதுவே மேலான ஆத்தும இரட்சிப்புக்குரிய திவ்விய போதனையென்றுகண்டு அதை அங்கீகரித்து, அதின் சத்தியத்தைக்குறித்துக் கோவிற்பூசாரியுடனும், பிறருடனும், பலமுறைகளிலும் சம்பாஷித்து, அஞ்ஞானமார்க்கத்தின் தகாத கேடான பழக்க வழக்கங்களையும், மதியீனங்களையும் எடுத்துக்காட்டியும் இரட்சாபெருமானாகிய யேசுக்கிறீஸ்துவே பாவிகளின் மீட்பர், அவரையல்லாமல் வேறொருவராலும் இரட்சிப்பில்லையென்று சாதனைபண்ணிக், கிறீஸ்துவினால் வரும் இரட்சிப்பையே அங்கிகரித்துக்கொள்ளும்படி புத்திசொல்லியும்வந்தான். இப்படியே தனது விசுவாசத்தை அறிக்கையிட்டு ௧௮௱௨௰ம் ௵ பிற்கூறில் இரட்சாபெருமானின் திருவடிக்கு அன்பனாய் அவர் நாமத்தில் ஞானஸ்நானம்பெற்றுத் திருச்சபையிற் சேர்ந்தான். அதன்பின் மூன்றுவருஷக்காலமாய் வேதவாக்கியத்தையும், பக்தியை வளர்க்கத்தக்க சிறுத்துண்டுப்புத்தகங்களையும் ஆவலோடும் அதிமுயற்சியுடனும் வாசித்துப் படித்துவந்தான். அதுவுமன்றிக் காலமே ஆறுமணியளவிற் தினந்தோறும் பள்ளிக்கூடத்தில் நடக்கும் ஜெப ஆராதனைக்குப்போய், வரு

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வதுமன்றி, அதிகாலமே நித்திரையை விட்டெழுந்து, வீடுவிட்டுப் புறப்பட முன் தன் குடும்பத்தாரோடு வேதவாக்கியங்களை வாசித்துப், பிரார்த்தனை பண்ணிவருவது அவனுக்கு வழக்கம். அவனுடைய பிற்காலநடக்கையிற் காணப்பட்ட நேர்மை, யோக்கியம் முதலியவற்றினால் சத்தியமார்க்கசெயம் அவனில் எவ்வளவுபெலன்கொண்டிருந்ததென்று விளங்கினது.

ஒருநாள் ஒரு செபக்கூட்டத்திலிருந்து, தன்னெசமானுடன் இருளான வேளையில் ஒரு தெருவைக்கடந்து குதிரைவண்டிலுக்குப்பின் வழமைப்படி ஓடிவந்தபொழுது ஒரு சர்ப்பத்தை மிதிக்கவே அச்சர்ப்பம் அவனைத் தீண்டிற்று. சர்ப்பவிஷத்தினால் தனக்கு மோசம்வருமென்று நினைத்துத் தன்பெண்சாதி பிள்ளைகளுக்குச் சொல்லவேண்டிய விஷேஷங்களை உடனே சொன்னான். விஷமேறுகிறதைக்கண்டு அவனுடைய அயல்வீட்டுக்குக் கொண்டுபோய் (௧) சுதேசவிஷவயித்தியர்கள் வயித்தியஞ்செய்தும் அவனைச் சுகப்படுத்த அவர்களால் முடியாதேபோயிற்று. அவனுடைய எசமானே அவனுக்குப் பக்கத்திலிருந்து ஆத்துமசரீர அவுஷதங்களைப் பிரயோகித்துக்கொண்டேயிருந்தார். அவனுடைய மனதின் நிலைமை எப்படியென்று விசாரித்தவிடத்தில் அவன் உற்சாகத்துடன் "நான் மனப்பாக்கியமுள்ளவனாயிருக்கிறேன்; நான் மனப்பாக்கியமுள்ளவனாயிருக்கிறேன்;" என்று சொல்லிக் கர்த்தராகிய யேசுக்கிறீஸ்துவிடத்தில் தான் வைத்திருக்கும் நம்பிக்கையையும் தன்னுள்ளத்திலுண்டாயிருந்த ஆறுதலையும் பற்றி அடிக்கடி பேசினான். தான் மோட்சம்போகிறேனென்ற தனது திடநம்பிக்கையையும். தன்னைச் சூழ்ந்திருக்கிறவர்கள் தன்னைப் பின்பற்றிவரவேண்டுமென்ற தனது அபிப்பிராயத்தையும் வெளிதிறந்துசொன்னான். அன்று சாயந்தரம் தான் சுகப்படுவேனென்ற நம்பிக்கை தனக்குச் சற்றுமில்லையென்று சொல்லித் தன்பெண்சாதியையழைத்து, அவளை நோக்கி, மோட்சத்தில் அவள் தன்னைச் சந்திக்கவிரும்பினால் அவனுடைய அஞ்ஞான உறவினர்கள் சொல்வதைக் கேளாமல் எவ்விதத்திலும் தன்னுடைய முன்மாதிரியைப் பின்பற்றுவதில் சற்றேனும் பிசகிப்போகவேண்டாமென்றெச்சரித்துப், புத்திசொல்லிச், சோதனைவேளையிலும், மரணவேளையிலும் சுவிசேஷத்தினால் தனக்குண்டாகும் மேலான அறிவையும், ஆறுதலையும்பற்றி மகாசந்தோஷத்துடன் துணிந்துபேசினான். வரவர நாடி தளர்ந்து பெலவீனமுண்டாகி மரணத்தறுவாயானவேளையில் தன் பெண்சாதியையும், தகப்பனையும், மற்றும் இனத்தவர்களையும் நோக்கித், தான் "மனப்பாக்கியம்" உள்ளவனாயிருக்கிறேனென்று சொல்லிக், கர்த்தராகிய இயேசுக்கிறீஸ்துவுக்குள் மரித்தான். அவனைச் சூழ்ந்திருந்த அஞ்ஞானிகள் அவன் சமாதானமாய் மரித்ததைக்கண்டு, மனமுருகப்புதலடைந்து, பூலோகத்திலொரு அற்புத சம்பவத்தைக் கண்டோம் என்றார்கள். அவனுடைய அஞ்ஞானப்பிதா "இவன் முன்னொரு பிசாசனாயிருந்தான். ஆனால் கிறீஸ்துவுக்கென்று தன்னை ஒப்புவித்தபிற்பாடோ சகல தீமையான வழியையும் விட்டுவிட்டான்" என்றான். அவன் பெண்சாதியும் தன் மரணம் தன் புருஷனுடைய மரணத்தைப்போலிருந்தாலோ என்ற ஆசையைக்காட்டிச் சாமுவேல் மரித்த கொஞ்சக்காலத்தின்பின் இரட்சகராகிய இயேசுக்கிறீஸ்துவில் விசுவாசம்வைத்துப் பாவஅறிக்கைசெய்து, ஞானஸ்நானம்பெற்று, எல்லாவற்றையும் கிறீஸ்துவுக்காக விட்டுவிட்டோமென்று அறிக்கையிடுகிற சிறுமந்தையைச் சேர்ந்தாள்.

(௧௦) வருஷமாகிய ௧௮௨௮ ம் ஞு ல் திருச்சபையிற்சேர்ந்த கிறீஸ்தவர்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் தொகை பத்துப்பெயர்மாத்திரமே. இவர்களில் வயோதிபரும் பத்தியில் தேறிவருகிறவரும் அக்காலத்தில் மிசியோன்பணிவிடையில் உபதேசியாயிருந்தவருமான ஒருவர்மாத்திரமே இப்பொழுது இன்னுஞ் சீவனோடிருந்து கிறீஸ்துவை மகிமைப்படுத்திவருகிறார். நல்லூரில் இப்பொழுது இருக்கிற ஆலயம் பழய உலாந்தாக்காரர் கட்டுவித்த கோவிலின் அழிந்துபோன அஸ்திபாரத்தின்மேல் இக்காலத்திற்றானே கட்டியெழுப்பப்பட்டது. அடுத்த பத்துவருஷக்காலங்களில், ௧௮௨௮ம் ௵. தொடங்கி ௩௮ம் ௵. வரைக்கும், கிறீஸ்தவர்களின் தொகை (௨௰) பெயருக்கு அதிகரித்தது. அப்பொழுது ௪ பெயர்மாத்திரம் உபதேசிமாராக ஏற்படுத்தப்பட்டிருந்தார்கள். இவ்வளவு வருஷக்காலவரையில் மிசியோன்கிருத்தியவிருத்தியில் கவனிக்கப்படத்தக்க விசேஷ நயங்கள் யாதேனுங் காணப்பட்டதில்லை.

கனம்பொருந்திய எர்லி ஐயரவர்கள் மிசியோன் ஸ்தானத்தில் ஸ்தாபிக்கப்பட்டு, மகாசித்தியுடன் தேற்றமடைந்துவந்த இங்கிலீஸ் வித்தியாசாலைக்குத் தலைவராய் மேல்விசாரணைசெய்தவர், கனம்பொருந்திய நயிற் ஐயரவர்கள், கிராமங்களிலும், வீடுகளிலும் போய்ச் சனங்களைச் சந்தித்தும், கிராமப்பள்ளிக்கூடங்களை மேல்விசாரணைபண்ணியும், தமது வாடிக்கையான தளராமுயற்சியோடு தாம் சந்திக்கும் அனைவோர்க்கும், நித்திய சீவவாக்கிய இரட்சாபெருமானின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தும், இவ்விதமே தேவ பணிவிடைக்கென்று தம்மை ஒப்புக்கொடுத்தார்.

ஒரு மரத்தில் உயிருண்டென்பதை இரண்டுவகையாய் அறியலாம். எவர்க்கும் தெரியத்தக்கதான அதன் கொப்புகள் இலைகளின் பச்சனவிலும், செழிப்பிலும், காணப்படாதிருக்கும் அதின் வேர்கள் நரம்புகளின் விரிவிலும் வளர்ச்சியிலுமே. ஒரு வகையானது சிலகாலமாய் வளர்ந்துகொண்டேயிருக்கும். மற்றதோ தெரியப்படாமல் பக்கத்திலுள்ள மண்ணிற் செறிந்து வேரோட்டிப் பெலங்கொண்டு அடிக்கும் எந்தக் காற்றுக்கும் அசையாது எதிர்நிற்கத்தக்கதாக உரங்கொண்டுவரும். அதுபோல இத்தனை வருஷக்காலவரையிலும் நடந்தேறிவந்த மிசியோன்கிருத்தியத்தின் தன்மையும் அவ்விருட்சத்தின் தன்மையதாய் இருந்ததாகக் காணப்படுகின்றது. சுவிசேஷசத்தியத்தின் மூலவேர் புலனுக்கெட்டாதவிதமாயும், மகா பெலப்பாயும் மனுஷருடைய இருதயங்களினுழைந்து வேரைப் பரப்பிப் பெலன்கொண்டிருந்தது. மிசியோனரிமாருடைய கபடமற்ற பதவிய சற்கிருத்தியத்தினால் சனங்களின்மனதில் முன் குடிகொண்டிருந்த தப்பெண்ணங்களெல்லாம் ஒருவாறு படிப்படியாய் ஒன்றின்பின்னொன்றாக விட்டுநீங்கின. இப்படியே சுவிசேஷவிதையானது விதைக்கப்பட—இருதய நிலங்கள் செவ்வையாகப் பண்படுத்தப்பட்டதெனச் சொல்லலாம். மிசியோனின் பிற்காலவர்த்தமானங்களைக் கவனிப்பதினால் இது முழுதும் மெய்யெனக்காணலாம்.

(இன்னும்வரும்.)

T. G.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## MODERN ASPECTS OF LOCAL HINDUISM.

## இத்தேசத்து இந்துசமையத் தற்கால நிலைபரம்.

இந்துதேசத்துச் சனங்களின் எண்ணங்களிலும், பழக்கங்களிலும் அனேக மாறுதல்கள் நிகழ்ந்திருக்கின்றனவென முந்தின பத்திரிகையில் எழுவிஷயங்களிற் பழையஎண்ண அழிவை எடுத்துக் காட்டினோம். புதிய எண்ண வளர்ச்சியை இப்பொழுது கவனிக்கக் கேட்கிறோம். விதைக்கிறவன் விதையை நிலத்திற் தூவும்போது உடனே அது வளருமென்று எண்ணுகிறதில்லை. அது வளரக்காணச் சிலகாலங் காத்திருப்பான். சிலவிதை முளைக்க மாட்டா. ஆனால் வேறு பல முளைக்கும். சத்தியமும் புதிய எண்ணங்களும் அப்படியே. யாழ்ப்பாணம் இந்துக்களுக்குள்ளும் அவ்வண்ணமே இருக்கின்றன. கிறிஸ்துமார்க்கத்தின் பேறுகளைப் பலவகையாய் அவர்கள் காண்பிக்கிறார்கள். எப்பக்கத்திலும் புதிய எண்ணங்கள் முளைக்கின்றன.

### II. The Growth of New Ideas.

### புதிய எண்ண வளர்ச்சி.

1 Mission Schools most popular and trusted.—மிஷனரிமார் அறிவு பயிற்றலில் மிக நம்பிக்கையானவும், கீர்த்திபெற்றவும், கலாசாலைகளாமதிக்கப்படுகிறார்கள். தொடக்கத்தில் அவர்களை இவ்வூரார் அறியவில்லை, நம்பவில்லை அதற்குப்பதிலாய் இகழ்ந்தார்கள். ஆனால் இப்பொழுதோ, இத்தேசத்தில் ஒவ்வொரு பிள்ளையும் மிஷனரிமார் பிரஸ்தாபம்பண்ணிய சாஸ்திரங்களையும், வித்தைகளையுங் கற்கிறதில் ஏறத்தாழ முயற்சியாயிருக்கின்றது.

2. The Bible commands growing respect.—கிறிஸ்த வேதாகமத்தை அதிக பிரபலியமாய் அறிந்தும் சரியாய் அதை விளக்கிக்கொள்ளும்பொழுது, அதிக மரியாதையும் கனமுஞ் செலுத்தி வருகிறார்கள். இவ் வேதத்தை இகழ்ந்து நிந்திக்கிறவர்கள் உண்டானால் மிகச்சிலர். அது கட்டளைச்சட்டமாகவும், மேலான சத்தியநூலாகவும், தவறற்ற தருமசாஸ்திரமாகவும் இருக்கின்றதென்பதை அனேகர் ஒத்துக்கொள்ளுகிறார்கள். வேதாகமத்தை அங்கிகரியாதவர்கள் அதின் சற்போதனைக்காகவும், நல்லொழுக்கத்துக்காகவுமல்ல, கருகலான தத்துவ சாஸ்திர நூலுக்கங்களைப் பிடித்துக்கொண்டு பின்னிற்கிறார்கள்.

3. The Hindus are copying the Missionarie's plans.—இந்நாட்களின் சிவனும் பெலமும் காட்டிவருகும் வேறொரு எண்ணமுண்டு. அது மிஷனரிமார் தாவிச்செல்லும் ஒழுங்குகளை இந்துக்கள்தாமும் தழுவி, நடத்துவதே. கலாசாலைகள் இங்குமங்கும் கிளம்புகின்றன. சனங்கள் தாமே அவைகளைக் கட்டி எழுப்புகிறார்கள். பெண்பிள்ளைகளுக்குந் தங்களுடைய புதிய கலாசாலைகளிற் கல்விபயிற்ற இந்துக்களும் வாஞ்சையாயிருக்கிறார்கள். இது எவ்வளவு மகிமையான மாறுதல்!

4. The altered condition of woman in Society.—வேறோர் புதிய எண்ணம். இந்துக்களுடைய தேசாட்டமாட்டத்தில் ஸ்திரிகளுக்குக் கிடைத்த மாறுதலான நிலையினால் விளங்குகின்றது. கல்விகற்ற ஸ்திரியே இப்போ செல்வாக்குள்ளவள். அது எப்போதும் நன்மைக்கான செல்வாக்கு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வைப்பாட்டிவீடுகள் வரவரக் குறைந்தின்றன. ஸ்திரி தனது சொந்த இல்லத்தால் சிறையாயிருத்தல் வரவர நீங்கின்றது.

5. Migration of Females no crime or disgrace.—வேறோர் புதியஎண்ணம். செல்வத்தைத்தேடிப் பிறஇடங்களுக்கும் தேசங்களுக்கும்போகுந் தைரியமானது ஸ்திரீகளுக்குமுண்டென்று விளங்குகின்றது. சீவனத்துக்காக யாழ்ப்பாணம் விட்டுப்போதல் இனிமேற் குற்றமுமல்லமரியாதையீனமுமல்ல.

6. A convert to Christianity neither a fool nor mercenary.—சைவசமயத்தைவிடுபவன் மூடனல்லவென்றும், கிறிஸ்துமார்க்கத்தை அங்கீகரித்துத் தழுவுகிறவன் பொருளாசைக்காரனல்லவென்றும், நம்புங்காலம் வந்துவிட்டது.

7. British Rule and Government a Blessing.– பல அளவான பலத்துடன் இங்குமங்கும் காணப்படும் வேறொரு எண்ணமுண்டு. அது பிரித்தானிய பிரமாணங்களும் ஆளுகையும் இவ்விடத்துக்கு ஒரு பெரிய சௌக்கியமாய் அமைவான அனுதாபத்துக்கும் தாபரிப்புக்கும் ஏற்றதாயும் இருக்கின்றனவென்பதும் அதிகரிக்கும் நம்பிக்கையே.

8. Caste not a religious; but a civil distinction.—அதிகரியாய் நிலைபெறும் வேறொரு எண்ணம் உண்டு. அது இந்துசாஸ்திரங்கள் எப்படித்தான் மாறாகச் சொன்னாலும் பலவகைப்பட்ட மனுஷவமிசத்தவர்களும் உண்மையாகவில் ஒரு சாதியென்பதே. இந்த சாஸ்திர சாதிபேதம் தேவ உற்பத்தியுள்ளதல்லவென்று தள்ளப்பட்டாயிற்று. அதினுடைய மார்க்கத்துக்குரிய வல்லமை அகற்றப்பட்டது. நாகரிகத்துக்குரிய பேதமாய் மாத்திரம் எண்ணப்பட்டிருக்கின்றது.

9. The True Christian is a good witness.—பரதேச ஆளுகையின்காலத்தில் வளருகின்ற வேறோர் எண்ணம் உண்டு. அது கிறிஸ்தவன் அஞ்ஞான அயலவனிலும்பார்க்க உண்மையுள்ளவன் என்பதே. வழக்காடுங்காலத்தில் பேசப்படுவன இதற்குச் சாட்சி." "என்னுடைய சாட்சிகளிலொருவன் கிறிஸ்தவன். அல்லது நீ ஒரு கிறிஸ்தவனானதால் பொய்சொல்லாதே."

10. Improvement in domestic architecture.—வீட்டுக்குரிய சிற்பவேலைகளிலும் மற்றும் அடுக்குகளிலும் புதியஎண்ணங்கள் வளருகின்றன என்பதைக் காட்டும் பெரிய அறைகள் பழைய பன்றிக்கூட்டுக்குப் பதிலாய்த் தோன்றின. மதியற்கூடங்களுக்குக் கதவுகளும், பலகணிகளுமுண்டு. மண்குடில் கரைந்துபோகக் கல்லுஞ் சுண்ணாம்பும் சேர்த்துக் கட்டிய சுவர்கள் கட்டியெழுப்பப்படுகின்றன. நாற்சார்க்கோட்டை உயர்ந்த காற்றுலாவும் சிறப்பான ஐரோப்பிய மண்டபமாய் மாறுகின்றது.

11. Transfer of confidence to the European system of medicine.—வேறொரு புதியஎண்ணம் உண்டு. அது சத்திரவைத்தியம் மருந்து வைத்தியம் இரண்டிலும் இவ்வூர் முறையிலிருந்த நம்பிக்கை மாறிஐரோப்பிய முறையைப் பற்றுதலே. டைக்துரை கட்டுவித்த வைத்தியசாலையில் வருஷந்தோறும் வந்தடையும் 10,000 நோயாளிகள் இதற்குச் சாட்சி.

12. Putting Christian thought into Sivite system.—மிகக்கவனிக்கத்தக்க பின்னோர் மாறுதலுண்டு. அது இந்துசமய நூலுக்கு கிறிஸ்துமார்க்க பொருள்கொடுத்து விளக்குதலே. சைவ சித்தாந்திகளில் இத்தன்மை பிரதானமாய்க் காணப்படும். இவர்கள் சமயஞ் சாஸ்திரமிரண்டிலும் கீழ்த்திசையாருடைய வியாக்கியானத்தினால் அர்த்தம்பண்ணுகிறார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

J. K.

## ANSWER TO A CHILD'S PRAYER.

# அநாத பிள்ளைகளுக்குத் தேவனே தஞ்சம்.

இற்றைக்குச் சிலவருஷங்களுக்குமுன் ஐசினுக் என்னும் கிராமத்தில் ஓர் அநாதபிள்ளை இருந்தாள். அவளைப் போஷித்துச், சிறப்பித்துப், பாதுகாத்துப் பற்பல வித்தைகளிலும் பழக்கவழக்கங்களிலும் பயிற்றிவிடுதற்கோ தந்தை தாய் இல்லாதவளாய் இருந்தாள். ஆயினும், இன்னோர் சிறுமியுடன் கூடி ஓய்வுநாளையொழிந்த மற்றைய தினங்களில் தெருவுக்குத் தெருச்சென்று, இன்ப கீர்த்தனைகளைப் பாடி, ஜீவனத்தைச் சம்பாதித்து வருவாள். அவளைக்காணும் உதாரசீலராகிய ஸ்திரீசனங்கள் பட்சமாய் உபசரித்துப் பாட்டுப் பாடுவித்துப், பகற்போசனம் அருந்தப்பண்ணி அனுப்பிவைப்பார்கள். இப்படியிருக்கையில் அக்கிராமத்துத் தேவாலயத்தில் அநேக ஸ்திரீகள், புருடர், பிள்ளைகள் ஓய்வுநாடோறும் அலங்காரமான வஸ்திரங்களை உடுத்தித், தங்கடங்கள் கொண்டைகளைச் சோதிமுடித்துக், தொப்பிகளைக் கவித்துக்கொண்டு, புதிய சிறந்த தோற்றத்துடன் ஆராதனைக்குப் போவார்கள். இந்த அநாதபிள்ளையோ ஆராதனை ஆரம்பித்தபின் மெல்ல வந்து எல்லாருக்கும் பின்னணியத்தில் மௌனமாய் உட்கார்ந்துவிடுவாள். இவ்விதமே ஓய்வுநாடோறும் செய்துவருவாள். ஒருநாட் பின்னேரத்தில் அக்கோவிலைப் பூஞ்சுத்தமடைத்துக் கூட்டித், துப்புரவாக்கும்படிக்குக் கதவுகள் சாளரவாயில்கள் எல்லாம் திறந்துவிடப்பட்டிருந்தன. அந்நேரத்தில் அக்கோவிலில் வாத்தியக்கருவியில் இராகம்பாடும் ஒரு கீதக்காரன் உட்சென்று, வாத்தியக்கருவியின் முன் உட்கார்ந்து, வாத்தியத்தில் கீதசாதனைசெய்தான். இந்தச் சிறுமியோ அவனுக்கு முந்தி உட்சென்று, ஓர் ஆசனமறைவில் அவன் காணக்கூடாதபடி நித்திரைத்தூக்கம் பிடித்தவளாய்ச் சாய்ந்து கிடந்தாள். வாத்தியக்கருவியில் அவன் சாதனைசெய்த சத்தத்தைக் கேட்டவுடன் அருண்டு கண்விழித்துக் காதுகொடுத்து உற்றுக் கேட்டுக்கொண்டே இருந்தாள். கொஞ்ச நேரஞ் சென்றபின்போ வாத்திய சாதனைகாரன் வாத்தியமாய் இருந்து வாத்திய ஓசையைக் களிசனையோடு கேட்டுக்கொண்டிருக்கும் பாலியப்பெண்ணை நோக்கி, "ஓகோ, பிள்ளாய், எங்கிருந்துவந்தாய்? என்னவந்தாய்?" என விசாரணைபண்ணியபின் எழுவயசுப்பிராயமுள்ள இந்தச் சிறுமியைக் கையில் எடுக்கிறான். அவளோ சற்றே திடுக்கிட்டுக், கையிலிருந்து நழுவி நழுவிப் பயப்படுகையில் "என்னை ஒன்றுஞ்செய்யாதேயும். நான் யாதொரு தீமைசெய்யக்கருதி இவ்விடம் வரவில்லை. இந்த வாத்திய ஓசையோ என் காதுகளுக்கு இனிய ஓசை. இதற்குள் ஓர் சிறிய தேவதூதன் இருந்து கீதம்பாடுகிறான் என்று அறிவேன். அதனால்தான் நான் இவ்விடம் வந்தேன்" என்றாள். "தேவதூதன் உள்ளே இருக்கிறான் என்று உனக்குச் சொன்னதார்?" என்று வாத்தியசாதனைக்காரன் வினவ,—அவளோ "அல்பேட் எனக்குச் சொன்னார்" என்றாள். "உன்னை வேய்க்கும்படியாக அல்பேட் அப்படிச் சொன்னாராக்கும். இது ஓர் அற்புத இயந்திரமல்ல; இதற்குள் தேவதூதன் இருந்து, இந்தக் கருவியை இயக்குகிறதாயில்லை; இது மனுஷனால் இயற்றப்பட்ட கருவி. வாத்திய சாதனைகாரர் எவரும் இக்கருவியில் கீதம்வாசிக்கலாம்" என்று சொல்லி, அவளைத் தன் சமீபத்தில் வரச்செய்து, கீதசாதனையைத் தன் கைவிரல்களால் செய்து காட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டிருன். அக்காட்சி இச்சிறுமிக்கு அதிக பீதியைக் கொடுத்தது. அதன் பின் சூரிய அஸ்தமன நேரமானது. ஆனதால் இன்னரகாரன் அந்தப் பிள்ளையை நீ எங்கே போகிறது? ஆர் வீட்டில் வாசம்பண்ணுகிறாய் என்று கேட்டான். அவளோ குதிரைசாலையைக் காட்டி நான் அங்கே இன்னொருடன் இருக்கிறதென்று சொல்லியபின் இந்தச் சாயந்தரம் இருட்டில் நீ தனியே போகக்கூடாது. என்னோடே வீட்டுக்கு வாவென்று சொல்லப், பிள்ளையோ பயந்து அழுதாள். ஆயினும் பலவாறு தேற்றியபின், அவளைத் தன் கையில் ஏந்தி, மார்போடணைத்துக்கொண்டு, தேவாத்தியாப்பியாசி வீடு சென்றான்.

சற்றே நேரஞ்சென்று போனபடியால் தேவாத்தியாப்பியாசியின் பெண்சாதி தன் நாயகனின் வரவை ஆவலுடன் காத்துக்கொண்டிருந்தாள். அவளோ தன் அன்பனின் அடிச்சுவட்டோசையைக் கேட்டவுடன் தன் கையிலிருந்த பின்னலூசியையும் பின்னலையும் பக்கத்தில் வைத்து, இதோ இவ்வளவு நேரஞ்செல்லும் வரைக்கும் இந்தக் காரிருள்கொண்ட இரவில் ஏன் தாமதப்பட்டீர் என்று வினவினாள்? தேவாத்தியாப்பியாசியோ மனைவியைப்பார்த்து, நல்லது அது பறுவாயல்ல, என்னுடன் கூடவந்தது ஆர் பாருமென்று சொல்லி, அச்சிறுமியை நெருப்புக்குமுன் நிற்கவிட்டான். அவன் மனைவியோ, இது ஆரென வினவியதற்கு அவனோ அந்தச் சிறுமியின் வரலாறுகள் எல்லாவற்றையும் சுருக்கச்சொல்லிக் குளிர்காய்ந்தபின் போசனபீடத்துக்குத் தானும் பெண்சாதியும் அச்சிறுமியும் போனார்கள். அவர்களோ அந்தப்பிள்ளையைத் தங்களுக்கிடையில் இருத்திச் சாப்பிடுகையில் வாத்தியாப்பியாசியின் மனைவியோ அவளை நோக்கி, "உன் பிதாமாதாவை அறிவாயா?" என்றாள். அவளோ ஆம், 'தகப்பனாரைத் தெரியும். அவர் இறந்துவிட்டார். ஒரு நல்ல மனுஷன், அவர் என்னை மிகுதியும் நேசித்தார், நானும் அவரை நேசித்தேன். அவர் இறந்தபோது திரும்ப வருவேனென்றார் இன்னம் காணவில்லையே" என்றாள். 'தாயாரைத்தெரியுமோ" என்ன, அவளோ "அறியேன். மாதாவை வைத்திருப்பது நல்லதுதான். என் தோழியாகிய மார்த்தாள் வெளியேபோய் வரும்பொழுது தாயார் அவளை முத்தமிடுகிறாள். நானோ போய்வரும்போது உரைத்துக்கொண்டோடிருந்தால் அடி ஆக்கினை கரகரப்புக் கிடைக்கிறது" என்றாள். உடனே தேவாத்தியாப்பியாசியும் மனைவியும் பெருமூச்சுவிட்டு எங்கள் ஒரேபெண் குமாரத்தி இறந்துவிட்டாள். அவளை எங்களை விட்டுப் பிரித்தெடுத்த தேவன் திரும்பவும் அவளைத்தானே எங்களுக்குத் தந்தாற்போலிருக்கிறது. இன்றுமுதலாக நாங்கள் அவளுக்குப்பதிலாய் இவளையே எங்கள் சுவிகாரப்புத்திரியாக அங்கீகரித்து உடை உணவு கொடுத்து வளர்ப்பதுமன்றி, எங்கள் நிலைமை உடைமைக்கும் சுதந்தரவாளியாக்கிக் கொள்ளுவோமென்று சொல்லித் தீர்மானித்து அவளுக்கு உடையுங் கொடுத்து அன்றிரா உறங்கப் பண்ணினார்கள். அவளோ படுக்கைக்குப் போகமுன் கர்த்தராகிய யேசுவே வாருமென்று சொன்னாள். உனக்கிதைச் சொல்லிக்கொடுத்தது ஆரென்று கேட்க,—என் பிதா எப்போதும் சொல்லுவார். அதைக் கேட்டுப் பாடமாக்கிக்கொண்டேன் என்றாள். என் பிதாவும் மாதாவும் கைவிடும்போது தேவனே என்னைக் கைநெகிழ விடாரென்று சொல்லிவரவேண்டுமென்று சொல்லிக் கொடுத்தார்கள் அன்றுமுதலாக நாடோறும் அவள் அவ்வாக்கியத்தையே சொல்லிவருவாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏறக்குறையப் பத்துவருஷக்காலமாக அந்தச் சிறுமியோ, அவர்களைத் தன் பெற்றோராகப் பாவித்து, நடத்திக் கனம்பண்ணி வந்ததுமன்றி முகத்தாக் கீதவாத்தியப்பிரியாசியாகித், தன்னை வளர்த்த பிதாவுக்கும், மாதாவுக்கும் பலவாறு உதவி சகாயஞ் செய்துவந்தாள். அவர்களும் இவளைத் தங்கள் குமாரத்தியாக நடத்திவந்தார்கள்.

சிறுவர், சிறுமிகளே, நீங்கள் பரமபிதாவை நேசித்துவந்தால், உங்கள் பெற்றோர் உங்களைக் கைவிட்டாலும், அவர் ஒருபொழுதும் உங்களைக் கைவிடார் என்று அறிவீர்களாக.

நீங்கள் சிறுபராயமாய் இருக்கையில், உங்கள் பெற்றோர் சொல்லித்தந்த சற்போதனையை மனதில் அவதானித்து கொள்வதும், பிதாமாதாக்களுடைய சன்மார்க்க நடையைப் பற்றி நடப்பதும் உங்களுக்குப் பிரயோசனமாய் முடியுமென்று மேலேசொல்லிய சரித்திரத்தினால் அறிந்துகொள்வீர்களாக.

L. S

## ROMANISM.

## ரோமான்மார்க்கம்.

There is nothing in the Holy Scriptures to show that the Pope is the successor of St. Peter.—மேலைச் சங்கிகையிலே சத்திய திருச்சபைக்குரிய அறிகுறிகள் நான்கையும் தெரிவித்துப், பின்பு அவ்வறிகுறிகள் ரோமான்சபையிலே காணப்படவில்லை யென்பதையும் திருஷ்டாந்தப்படுத்தினோம். இப் பத்திரத்திலே பாப்புவானவர் சம்பேதுருவின் பாரம்பரை ஆசனத்தில் வந்தவரென்றும், கிறிஸ்துவுக்குப் பிரதியானவரென்றும், திருச்சபைக்குத் தவறில்லாத தலைவரென்றும் பாப்பியர் சாதிக்கிற கொள்கைகள் அற்பமேனும் பரிசுத்த வேதத்தைக்கொண்டு அத்தாட்சிபண்ணத்தக்கதாயிருக்கவில்லையென்பதை ரூபிக்கும்படியாக, சென்ற வருஷத்திலே இத்தாலியில் கூடிய கவுன்சல் சங்கத்தில் மேன்மைதங்கிய கல்விமானும் குரோஷியா (Croatia) விலுள்ள பொஸ்னியா (Bosnia) வுக்கு மேற்றிராணியுமாகிய ஸ்ரொஸ்மேயர் (Strossmayer) என்கிற ஓர் ரோமன்கத்தோலிக்க விசப்புவானவரால் பேசப்பட்டதென்று பகிரங்கஞ் செய்யப்பட்டவற்றை மொழிபெயர்த்துத் தருவதே நமது வார்த்தையிலும் அதியுத்தமமாயிருக்குமென்று ஆலோசிக்கிறோம். இந்த விசப்புவானவர் அமர்ந்த புத்தியுடனே வெருகாத்திரமான முகவுரை வாக்கியங்களைச் சொல்லி ஆரம்பித்தார். அது வருமாறு.

Speech of Bishop Strossmayer at the Council in Rome.—கனம்பொருந்திய சகோதரரே, தேவனுக்கு நானும் உத்தரவாதஞ்சொல்லவேண்டியவனென்கிற பயபத்தியான உணர்ச்சியுடனே ஆலோசனைச்சங்கத்தின் அக்கிராசனராகிய பாப்புவானவர் சம்பேதுருவின் பாரம்பரையில் வந்தவரோவென்பதும், கிறிஸ்துவுக்குப் பிரதியானவரோவென்பதும், திருச்சபைக்குத் தவறில்லாத தலைவரோவென்பதுமாகிய விஷயங்களுக்கு ஆதாரங் கண்டுபிடிக்கும்படியாகப் பரிசுத்த வேதாகமத்தை நுணுக்கமாய் ஆராய்வுபண்ணிப்பார்த்தேன்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Nothing said about a Pope in the Bible.—பக்கம் பக்கமாய்ப் பரிசுத்த புத்தகத்தைத் திறந்து ஆராய்ந்தேன. நான் பார்த்தும் என்ன? அல்ரிதேமொன்றேன்(Ultramontane) கட்சியாரின் கருத்து நியாயமானதென்று ஸ்தாபிப்பதற்கு ஆதாரமாக யாதொன்றையும் நான் அதில் காணவில்லை! மகமதுவின் பின் அவன் பரம்பரையில் யார் வருவாரென்பது அப் பரிசுத்த புத்தகத்தில் காணப்படாமலிருக்கிறது போலவே, பாப்புவைப்பற்றியாவது அவர் சப்பேதுருவின் பரம்பரையில் வந்தவரென்பதைப்பற்றியாவது, பாப்பு யேசுக்கிறிஸ்துவுக்குப் பிரதியானவரென்பதைப்பற்றியாவது, ஒன்றும் சொல்லியிருக்கவில்லை. இதென்ன ஆச்சரியம்!!!

மேன்மைதங்கிய சகோதரரே, தேவசந்நிதியிலும் பாடுபட்ட சுருபத்திற்கு நேரே என் கைகளை நீட்டிக்கொண்டும் நான் சொல்லுகிறேன், புதியேற்பாட்டுப் புத்தகத்தை நான் ஆதியோடந்தமாக வாசித்துப்பார்த்தளவில் தற்காலத்திற் காணப்படுகிற பாப்புமார்க்கத்தின் அடிச்சுவடையாயினும் அப் புத்தகத்தின் பக்கங்களில் கண்டதில்லை. விவிலிய புத்தகம் முழுவதிலும் உடன் வேலைகாரராகிய அப்போஸ்தலருக்கு மேலாகப் பேதுருவுக்கு இயேசுவானவர் அதிகாரங்கொடுத்ததாக ஒரு அதிகாரத்தையாவது ஒரு வசனத்தையாவது பார்த்ததில்லை.

If our Lord meant Peter to be Head, would He not have said so?—யோனாவின் புத்திரனாகிய சீமோன் கும்பையல் என்கிற பரிசுத்த பாப்பு தற்காலத்தில் கோரிக்கைபண்ணுகிற இந்த அந்தஸ்தில் நியமிக்கப்பட்டிருந்தாலும் கிறிஸ்துவானவர் நான் என் பிதாவினிடத்திற்கு ஏறியபிற்பாடு நீங்கள் எனக்கு அமைந்து நடந்ததுபோலவே பேதுருவுக்கும் கீழ்ப்படிந்து நடவுங்களென்றும் பூமியில் எனக்குப் பிரதியானவனாய் அவனை ஏற்படுத்துகிறேன் என்றும் தமது அப்போஸ்தலருக்குச் சொல்லாமல்விட்டது பெரிய ஆச்சரியமாயிருக்கிறது.

When Christ promised twelve thrones to his Apostles, He did not say one is to be higher for Peter.—இதைப் பற்றிக் கிறிஸ்துவானவர் மௌனமாயிருந்ததுமன்றி, இஸ்ரவேலின் பன்னிரண்டு கோத்திரங்களையும் நியாயந்தீர்க்கும்படி சிங்காசனங்களைத் தமது அப்போஸ்தலருக்கு வாக்குப் பண்ணியபொழுதும் (மத். ௧௯. ௨௮.) பன்னிருவருக்கும் ஆளுக்கொவ்வொன்றாகப் பன்னிரண்டு சிங்காசனங்களை வாக்குப்பண்ணினார். இவர்களில் ஒருவன் மற்றவர்களுக்கு மேலானவனாயிருப்பானென்றாவது, மேலாயிருக்குதல் பேதுருவுக்கே உரியதென்றாவது சொல்லவில்லை. அப்படியிருக்கவேண்டுமென்பது அவர் கருத்தானால் மெய்யாகவே அவர் அதைத் தெரிவித்திருப்பார். இந்த விஷயத்தில் அவர் மௌனமாயிருந்ததையிட்டுத் தருக்கசாஸ்திரப்படி நாம் அப்போஸ்தலரின் சமுதாயத்திற்குப் பேதுருவை ஓர் பிரதானியாக்குவதற்குக் கிறிஸ்துவானவர் எண்ணவில்லையென்றே அநுமானிக்கவேண்டும்.

Christ forbade Peter and the other Apostles to have rule or power over believers.—கிறிஸ்துவானவர் புறச்சாதியாரின் இராசாக்களைப்போல விசுவாசிகளுக்கு மேலாக ஆளுகையும், தலைமையும், அதிகாரமும் உடையவராயிருக்கப்படாதென்று பேதுருவையும், அவனுடைய கூட்டாளிகளையும் எச்சரித்தாரென்று வேதம் சொல்லுகின்றது. (லூக். ௨௨. ௨௫, ௨௬.) பேதுருவைப் பாப்புமார்க்கிறிஸ்த[illegible]க்களுக்குள் அப்படியிருக்கப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படாது" என்று யேசுநாதர் அவர்களுக்குச் சொல்லமாட்டாரோ. எங்கள் பாரம்பரையின்படியும் ஆவிக்கும், பூமிக்கும் உரித்தாகிய அரசகாரங்களுக்குக் குறிப்பாக இரு பட்டயங்களையும் பாப்புமார்க்கம் தனது கரங்களில் தரித்திருக்கின்றதல்லவா?

The gift of the Holy Ghost and the power to bind and loose was given to all —கிறிஸ்துநாதர் உலகத்தை வெற்றிகொள்ளும்படி சமஸ்த அப்போஸ்தலரை அனுப்பியபொழுது கட்டவும் அவிழ்க்கவும் அதிகாரத்தையும் பரிசுத்த ஆவியின் வரப்பிரசாதத்தையும் ஒரேவிதமாக எல்லாருக்கும் கொடுத்தார். நல்லது, பேதுரு அப்போஸ்தலனைத் தமக்குப் பிரதியானவனும் ஏற்படுத்தினது அவர் சித்தமாகில் திருப் போராட்டஞ்செய்யவேண்டிய தமது சேனைக்கு மகாசேனாபதியாய்ச் சம்பேதுருவை நியமனம்பண்ணியிருப்பாரே.

Peter with John was sent to Samaria to preach. If he was Head, would he be sent?—இன்னும் என் மனதிற் தோன்றுகிற சங்கதி ஒன்றிருக்கிறது. பேதுரு அப்போஸ்தலன் பாப்புவாகவிருந்தால் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும்படியாக அப். யோவானுடனே இவனையும் சமாரியாவுக்கு அனுப்பும்படி துணிவார்களா? (அப். அ: கச.)

Who presided at the council at Jerusalem? James not Peter.—அதுவுமன்றி முற்றினதிலும் வெகு பாரதூரமான வேறும் ஒரு சம்பவமுண்டு. விசுவாசிகள் விகற்பமான கருத்துக்கொண்டிருந்த விஷயத்தைக் குறித்துத் தீர்ப்புச்செய்யும்படி எருசலேமிலே ஒரு கவுன்சல் சங்கங் கூடவேண்டியிருந்தபொழுது பேதுரு அப்போஸ்தலன் பாப்புவாகவிருந்தால் இச்சங்கம் கூடிவரவேண்டுமென்று கற்பிப்பவனார்? சம்பேதுருவல்லவா? அக்கிராசனனாய் வரவேண்டியவனார்? சம்பேதுருவாவது, அவன் பிரதியாக நியமிக்கும் வேறொருவனாவதல்லவா? வாக்குவாதம்பண்ணிய விஷயத்தில் ஆலோசனையையும் தீர்ப்பையும் எழுதிப் பிரசித்தம்பண்ணவேண்டியவனார்? சம்பேதுருவல்லவா? ஆனால் அப்படிப்பட்ட காரியம் ஒன்றும் சம்பவிக்கவில்லையே. அப்போஸ்தலனாகிய பேதுரு மற்றும் தனது கூட்டாளிகளைப்போலவே அக்கவுன்சல் சங்கத்தில் சமுகமாயிருந்தான். சங்கத்தின் தீர்ப்புவாசகத்தை இசைத்தவர் அப்போஸ்தலனாகிய யாக்கோபேயல்லாமல் பேதுருவல்ல. சங்கத்தின் தீர்ப்பு வரையப்பட்ட பத்திரமோ அப்போஸ்தலரும், முதியோரும், சகோதரருமாகிய இவர்களின் நாமத்தைக்கொண்டு பிரசித்தம் பண்ணப்பட்டது. (அப். கரு.) இப்படியா நாங்களும் எங்கள் சபையிலே காரியங்களை நடத்துகிறோம்?

No mention of Peter's primacy in the Holy Scriptures.—கனம்பொருந்திய சகோதரரே, நான் வேதத்தை எவ்வளவு ஆராய்வுபண்ணிப் பார்த்தேனோ அவ்வளவு யோனாவின் புத்திரனாகிய சீமோனுக்குத் தலைமையிருந்ததில்லையென்று உணர்த்தப்பட்டிருக்கிறேன்.

The Apostle Paul censures those who say they are of Peter, and declares that Jesus Christ is the only Head.—சம்பேதுருவின்மேல் திருச்சபை கட்டப்பட்டிருக்கிறதென்று நாங்கள் போதிக்கிறோம். எவரும் மறுக்கக்கூடாத நற்சாட்சிபெற்றவராகிய சம் பவுலோ அப்போஸ்தலரும் தீர்க்கதரிசிகளுமானவர்களின் அஸ்திவாரத்திலே கட்டப்பட்டீர்கள், அதற்கு யேசுக்கிறிஸ்து தாமே கோடிக்கல்" (எபே. உ: உ௰.) என்று சொல்லுகிறார். இந்த அப்போஸ்தலன்தானே பேதுருவுக்குத் தலைமையுண்டென்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறவிசுவாசம் அடத்தியென்று உணர்த்தக்கதாக நாம் சம்பேதுருவைச் சேர்ந்தவர்களென்பாரையும் ஒருமிக்கக் கண்டித்தாற்போல, நான் பவுலைச் சேர்ந்தவன். நான் அப்பல்லோவைச் சேர்ந்தவன் என்று சொல்லுகிறவர்களை வெளியாகக் கண்டிக்கிறார் அப்போஸ்தலனுகிய பேதுரு கிறிஸ்துவுக்குப் பிரதிநிதியானவனுகில் அவனைச் சேர்ந்தவர்களையும் பொதுப்பட மற்றவரோடு கண்டிப்பாரா? அவர்களை நீங்கலாக்கிக்கவனமாயல்லவா பேசுவார்?

No mention of the Papacy among the offices of the church enumerated by St. Paul.—அப்போஸ்தலனுகியபவுல் திருச்சபையிலுள்ள உத்தியோகங்களைச் சொல்லியவிடத்தில் அப்போஸ்தலர், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர், உபாத்தியாயர், போதகர் என்பவைகளையே சொல்லுகிறார். கனம். சகோதரரே, புறச்சாதியாரின் ஆசிரியராகிய இவர் பாப்பியத்துவம் தேவனால் ஆக்கிராபிக்கப்பட்ட ஏற்பாடானால் சகலஉத்தியோகங்களிலும் மேலானதாகிய இதை இங்கே சொல்லாமல் விடுவாரா? விட்டுவிட்டார் என்றால் அதை நம்பலாமா? இப்பொழுது கூடுகிற இக்கவுன்சல்சங்கத்தின் சரித்திரத்தில் பரிசுத்த கும் பைபல என்பவரைப்பற்றி யாதொன்றும் சொல்லாமல் விட்டுவிடக்கூடியதல்ல. அதிலும் பாப்பியத்துவத்தைப்பற்றி, பவுல் அப்போஸ்தலன் ஒன்றும் பேசாமல்விடக்கூடியது எளிதல்லவென்று எனக்குத் தோன்றுகின்றது. (இப்படிப் பேசுகையில் அநேகர் கூக்குரலிட்டு பதிதனே பேசாதே போகர்த என்று விசப்புவை அதட்டினார்கள்.)

If there was a Pope would St. Paul omit the mention of it in his Epistles?—அப்போஸ்தலனாகியபவுல் புறச்சாதியாருக்கு எழுதிய எந்த நிருபத்திலாயினும் பேதுரு அப்போஸ்தலனுடைய தலைமையைப்பற்றி யாதொன்றும் பேசியிருக்கவில்லை. தலைமையுட் பெரிதிப்பதில் தவறில்லாத சிரேஷ்ட முருடைய ஒருவர் திருச்சபைக்குத் தலையாயிருந்தால் புறச்சாதியாரின் ஆசிரியராகிய பவுல் அப். அற்பமேனும் அதைப்பற்றிச் சொல்லாமல்விடுவாரா? அப்போஸ்தலர் காலத்துச்சபை தப்பறைகளுள்ளதாயிருந்ததென்று இப்பொழுது சொல்லுவதென்ன? நாம் (அப்படிச் சொல்லத் துணியமாட்டோம்.) பாப்பு இல்லாமலிருந்த அந்தக்காலத்தைப்பார்க்கிலும் திருச்சபை அதிக நேர்மையும், தூய்மையும், பரிசுத்தமுமாயிருந்த காலம் வேறொன்றில்லை.

Neither James, John, or Luke make any mention of it.—இதுவுமன்றி சம். பவுல், அல்லது யோவான், அல்லது யாக்கோபு எழுதிய புத்தகங்களிலாவது அப்போஸ்தலருடைய நடபடிகளை எழுதிய சரித்திரகாரனை சம் லூக்காவின் புத்தகத்திலாவது பாப்பிய அதிகாரத்தைப் பற்றிய சுவட்டையாயினும் குறிப்பையாயினும் நான் காணவில்லை. பேதுரு பாப்புவாயிருந்தால் பரிசுத்த வேதாகமப்பகுதிகளை எழுதிய இப் பரிசுத்தவான்கள் அதைப்பற்றி மௌனமாயிருந்ததற்கு நியாயமென்னவென்பது எனக்குப் புலப்படவில்லை.

Nor does Peter himself.—தனது முதன்மைத்தன்மையைப்பற்றிப் பேதுரு அப்போஸ்தலனும் தானும் மௌனமாயிருந்தது பேராச்சரியமாயிருக்கிறது. நாம் சொல்லுகிறது போலப் பேதுரு பூவுலகத்தில் கிறிஸ்துவுக்குப் பிரதிநிதியானவனாயிருந்தால், அதை அவன் அறிந்திருப்பானல்லவா? அவன் அறிந்திருந்தால் பாப்புக்குரிய அதிகாரத்தை ஒருதரமாயினும் செலுத்தாமல் விட்டதென்ன! பெந்திக்கொஸ்துநாளிலே தனது முதலாம்பிரசங்கத்தைச்சொன்னபொழுது அதைச் செலுத்தியிருக்கவேண்டும். அப்படிக் காணவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருசலேமின் கவுன்சல் சங்கத்தில் அவ்வதிகாரத்தைச் செலுத்தியிருக்கவே
ண்டும். அப்படியுமில்லை. அந்தியோகியாவிலாவது அவ்வதிகாரத்தைக்கா
ட்டியிருக்கவேண்டும், அதுவுமில்லை, பின்னை எவ்வம் சகோதரரே, இவ
ர்களைப்போலும் ஒரு பாப்பைக் குறித்து மனோபாவனைபண்ணிப் பாருங்கள்.

If Peter was Pope he was not aware of it himself.—பேதுரு அப்போ
ஸ்தலன் பாப்புவாக இருந்தானென்றுவைத்துக்கொண்டாலும் அவன் அச்சமயத்தி
ல் அதைப்பற்றி அறிந்திருக்கவில்லையென்பதையும் அங்கீகரித்துக்கொள்ள
வேணும். நினைப்பதற்கும் சிந்திப்பதற்குமெளிதல்ல எந்தமனுஷருமிதனும்.
இவ்விரண்டு கற்பிதங்களும் நம்பப்படத்தக்கவைதானேவென்று சிந்திக்க
ட்டும்.

If you maintain the Divine Institution of the Papacy, you must
destroy the Bible.—சொல்லப்பட்ட தியாயங்களைத்திரட்டிப்பார்க்கும்போ
ழுது அப்போஸ்தலர் சீவனோடிருந்தகாலத்தில் பாப்புவும் ஒருவருண்டோ
வென்கிற நினைவும் எண்ணமும் ஒருக்காலும் திருச்சபையிலிருக்கவில்லை
யென்று தெரிகிறது. அதற்கு மாறாக இருக்கவேண்டுமென்னில் நாம் சா
திக்கில் பரிசுத்த வேதாகமத்தை நெருப்பிலேயிடவேண்டும். அல்லது நம
துமனதை விட்டுக் குடிபோகப்பண்ணவேண்டும்.

But was not Peter in Rome?—காரியங்களெல்லாம் ஒரு பட்சத்திலிரு
க்க,—நான் கேட்கிறேன். ரோமையில் பேதுரு அப்போஸ்தலன் வாசம்பண்
ணவில்லையா?, அவ்விடத்தில் தலைகீழாய் அவர் அறையப்படவில்லையா?
அவர் உருக்கார்ந்து போதித்த நாற்காலியும். மாசெல்லாறும் பூசைப் பலிபீட
மும், கீர்த்திய நகரமாகிய ரோமையிலில்லையா?

There is nothing except tradition and fable to prove that Peter
was ever at Rome—ஆம். சகோதரரே, சம்பேதுரு ரோமாப்பட்டினத்
திலே வாசம்பண்ணினுரென்பதற்குப் பாரம்பரையேயன்றி, வேறு சாட்சியி
ல்லை. அவர் ரோமருக்கு விசுப்புவாயிருந்தாரென்று வைத்துக்கொண்டா
லும் அதைக்கொண்டு அவருக்கு அதி தலைமையுண்டென்பதை அத்தாட்சிப
ண்ண எவ்வகியாயங் காணலாம்? பேர்பெற்ற படிப்பாளியாகிய ஸ்கேலி
சா (Scaliger) என்பவர் ரோமையில் சம்பேதுரு விசுப்புத் தத்துவம் செலு
த்தினுரென்பதும் வாசம்பண்ணினுரென்பதும் நிந்தையான கட்டுக்கதைகளி
ன் வகுப்பிற் சேர்ந்தவைகளென்று எழுதுகிறார்.

The conclusion of the matter; "Search the Scriptures."—இப்படிவி
சப்ப ஸ்ரோஸ்மேயர்(Strossmayer) பேசுகையில் சபைக்கள் பெருங்கூரலிட்டு
இவனை வாய்பொத்தப்பண்ணுங்கள்; இவனோ அசத்தியங்கள்; இவன் பதிதன்
என்று ஆரவாரஞ்செய்தார்கள். இவரோ தாம் வேதத்தை ஆதாரமாகக்கொ
ண்டு பேசியவற்றை நிறைவேற்றினார்.

வாசிக்கிறவர்களே பேசியவைகள் யதார்த்தமானவைகளோவென்று அறியு
ம்படி வேதத்தை "ஆராய்ந்துபாருங்கள்" என்பதை மாத்திரம் நானும் உங்களு
க்குச் சொல்லுகிறேன்.*

T. C.

---

* இந்தப் பிரசங்கத்தை நாம் மொழிபெயர்த்தபின்பு சொல்லப்பட்டமேற்றிரா
ணியார் இதற்கு ஆக்கியோன் அல்லவென்றும், அவர்தாமே ஆக்கியோனென்று
ம் இப்படியே விகற்பித்துவந்த விசேஷங்களையும் நாம் வாசித்தறிந்தோம். ஆரா
யிருந்தாலுமென்ன "எப்பொருள் யார்யார்வாய்க் கேட்பினும் அப்பொருள் மெய்ப்
பொருள் காண்பதறிவு."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## TRAINING OF CHILDREN

### நாலுவயதுக்குமேற்பட்ட பிள்ளைகளைப் பெற்ருர் ஆளும் முறை.

பெற்ருரே,

இதற்குமுன் போனசங்கிகையில் சிறுபாலியரைப் பெற்ருரும், பர்தகாவலரும் வளர்க்கும் முறைமையைப்பற்றிச் சுருக்கமாய்ச் சொல்லப்பட்டது. இப்பொழுதோ நாலுவயசுக்கு மேற்பட்ட பிள்ளைகளை ஆண்டு நடத்தி வளர்க்கும் முறைமையைக் குறித்துச் சொல்வதைக் கவனிக்கும்படி கேட்கப்படுகின்றது. உங்கள் பிள்ளைகள் ஓடி உலாவி விளையாடி, மழலைவார்த்தைகளைப் பேசக்கூடியவர்களாய் வந்த உடனே அவர்களுக்குப் பாவ நீதங்களைச் சொல்லிக்காட்டுகிறதுமன்றித் தங்கள் பாவங்களை மன்னிக்கும்படி யேசுவை நோக்கிப் பிரார்த்திக்கவும் கற்றுக்கொடுக்க வேண்டும். ஆழியில் அதிகதியாய் ஓடும் கப்பற் சுக்கானியின் கண்கள் திசையறிகருவியிலும் இத்திசைகாட்டும் நட்சத்திரங்களிலும் சென்று பதிந்திருக்கிறதுபோல, உங்கள் பிள்ளைகளை இவ்வுலகமாகிய ஆழியில் செலுத்திக்கொண்டுபோகும் சுக்கானிகள் நீங்கள் தாமென உணர்ந்து உங்கள் சிறுவரும் சிறுமிகளும் நேர்பாதையில் சென்றேறிப்போக எல்லாவற்றிற்குங் காரண சற்குருவாகிய யேசுவின் பாதத்தில் உங்கள் கண்கள் இடைவிடாது படிந்து பதிந்து இருப்பதுபோல, உங்கள் பிள்ளைகள் கண்களும், அப்படிச்செய்யப் பழக்கி வரவேண்டும். அவர்களை உங்களுக்கும், பிறர்க்கும் கீழமையவும், வீட்டிலும், வெளியிலும், பள்ளிக்கூடங்களிலும், எவர் முன்பாகவும், நல்லவர்களாய்நடக்கவும்பண்ணவேண்டும். பெற்ருர் பிள்ளைகளை ஆண்டுவருதல் மற்றெக்கடமைகளிலும் சிரேஷ்டமென்ச் சொன்னாலும் பிழைபோகாது. பிள்ளைகள் பெற்ருரைஅஞ்சாமலும், ஆள இடங்கொடாமலும் வரவேண்டும். பெற்ருரே அவர்களை ஆண்டு நடத்திவருதலின் பயன் இம்மட்டெனத் தொகுக்க நமது திறமை போதாதிருந்தும், ஆளுவது அசத்தியமென்றும், அது அதிக பிரயோசனத்தை விளைவிக்குமென்றுஞ் சொல்லப் பின்னில்லோம். ஆளுகிறதும், ஆளப்படுதலும், நல்லதுதான் என்பதைப் பெற்ருர் தமக்கு மேற்பட்டவர்களால் ஆளப்படவிரும்புதலால் பிள்ளைகளுக்கு முன்மாதிரிகாட்டி, அவர்களும் தங்கள் தங்கள் அதிபதிகள் பெற்ருர், உபாத்தி, குரு முதலான குரவருக்குக் கீழ்ப்படியப்பண்ணி வரவேண்டும். ஒவ்வொரு காலைமாலைக் குடும்பாராதனைகளிலும், பெற்ருர் பிள்ளைகளை ஒரேஇடமாகச் சேர்த்து ஓடி உலாவி விளையாடிக் குழப்படிபண்ண இடங்கொடாது அமைதியாய் உட்காரப்பண்ணி, ஆராதனைக்கிருத்தியங்கள் எவற்றையும் கவனிக்கப்பண்ணவேண்டும். சற்றே எழுத்துக்கூட்டி வாசிக்கத் தக்கவர்களென்ருல், அவர்களைக்கொண்டு இரண்டொரு வசனம் வாசிப்பிக்க வேண்டும் பிள்ளைகளுடனே கூட்டம்வைக்கும் நேரத்தில் நெடுந்தூரம் வாசித்து நெடும் பிரார்த்தனைபண்ணி, நெடுநேரம் பிடித்துப் பிள்ளைகள் மனதை அலுக்கப்பண்ணுவது புத்தியல்ல. அப்பிள்ளைகள் எவ்விதத்திலுங் கோபங்கொண்டால் உடனே மிலாறுபாவியாமல் பட்சத்தோடும் அன்போடும் ஆறுகை செய்து அக்குணத்தைத் தடுக்கப் பிரயாசப்படவேண்டும். மிலாற்றிலேயுள்ள பலத்திலும் பட்சத்திலும் அன்பிலும் அதிகபெலன் உண்டென்பதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளைசயமேயில்லை. வீட்டிலிருக்கையில் பிள்ளைகளை நன்றாய் ஆண்டுகொண்டால், கோவிலில் அவர்களை ஆளுவது மிக எளிதாகும். உங்கள் பிள்ளைகளின் சிறுபராயம்முதல் நாளுக்குநாள் அவர்கள் நன்னடையைக்குறித்துக் கரிசனையுடனும், கண்விழிப்புடனும், எல்லார்முன்பும், எவ்விடத்திலும் கவனித்துவருகிறதுமன்றி, அவர்கள் கொஞ்சக்கொஞ்சமாய் வாசிக்கவும், சொற்களுக்கு அர்த்தம்பண்ணவும், எழுத்துக்கூட்டவும் செய்துவரவேண்டும். கணக்கிலே கூட்டவும், கழிக்கவும், பெருக்கவும், பிரிக்கவும் பண்ணிவரவேண்டும். உங்கள் பிள்ளைகள் ஆறு வழு வயசுள்ளவர்களாய் வருமட்டும், பெரும்பான்மைபற்றி மாதாக்களே அவர்களின் நன்னடை, நற்குணம், பழக்கவழக்கங்கள், மூலபாடங்கள் முதலானவைகளில் விழிப்பாய்ப் பார்த்துவரவேண்டும். பிதாக்களும் இடைக்கிடை மாதாக்களுக்கு உதவிசெய்வதுமன்றிப் பிள்ளைகளை ஆண்டுகொள்ளும் விஷயத்தில் இவ்விருவரும் இசைந்துபோகவேண்டும். ஒருகுடும்பத்தில் இரண்டு மூன்று பிள்ளைகள் இருக்கவேண்டிவருமிடங்களில் சிலபிள்ளைகள் சிறிதுவேளைகளில் சண்டைபிடிக்கிறதுமுண்டு. அவர்கள் ஒருவரொருவருடன் சண்டைபிடித்தபின்போ * பழிவாங்கிக்கொள்வதுமன்றி தற்பிரியமும் வெடுவெடுப்புமுள்ளவர்களாகிறார்கள். சிலவேளை அவர்கள் பெருங்குரலெடுத்து அழுவார்கள். சாப்பாட்டுக்குப்போகப் பிரியப்படார்கள். அவர்களுடைய முகத்தோற்றம் வேறாய்ப்போம். இன்னும் பலவிதமான தீய்க்குணங்கள் அவர்களில் தோன்றும். நல்லபழங்களைப், புடவைகளை, நேர்த்தியான பாய், தலையணை முதலானவைகளைக் காணும்போது, தங்கள் சகோதரர், சகோதரிகளுக்குக்கொடுப்பதிலும்பார்க்க தங்களுக்குத் தரவேண்டுமென்று தற்பிரியத்துடன் அழுது பழிவாங்குவார்கள். இப்பெயர்ப்பட்ட தருணங்களில் அப்பெயர்ப்பட்டவர்களைப் பிரித்து அப்புறம்வைத்துச் சமாதானம் கர்த்தராகிய யேசுவின்குணமென்றும், சண்டை தற்பிரியம் முதலான தீய்க்குணங்கள் பசாசின் குணமென்றும், பொல்லாத இருதயத்திற்கு அவைகள் அறிகுறியென்றும் பட்சத்தோடும், அன்போடும் போதித்து, அத்தீய்க்குணங்கள் தங்கள் பிள்ளைகளில் வளரவிடப்படாது. பெற்றோர் தங்கள் குடும்பத்தை ஆண்டுகொள்ளுகையில் ஒருமித்துப்போவதுமன்றி, தங்களுக்குள்ளே பின்னபேதங்கள் பிரிவினைகள் இருக்கிறதாகப் பிள்ளைகள் காண இடம்வைத்து நடக்கப்படாது. அவர்களைப் போதிக்கையிலும் கடிந்துகொள்ளுகையிலும் பட்சமும் மெத்தெனவுமான சொற்களைப் பாவிப்பதேயன்றி உரத்த சத்தத்துடன் கடுஞ்சொற்களைப் பேசப்படாது. சரீரம் அழிந்தும் ஆத்துமாவோ அழியாமல் எப்போதுஞ் சீவிக்கும் வஸ்துவென்றுணரும் உணர்ச்சியோடே பிள்ளைகள் நித்திய மனப்பாக்கியத்தையும் பேரின்ப சந்தோஷத்தையும் பெற்றனுபவிக்கத் தக்கதாய் அவர்கள் உள்ளங்களில் பத்திக்குரிய வித்துக்களைப் பதித்து நித்திய யாதனைக்காளாக்கும் ஒவ்வொரு தீய்க்குணங்களையும் செயல்களையும் அவர்களிலிருந்து நிர்மூலப்படுத்தத் தங்களால் இயன்றமட்டும் பிரயாசப்பட்டு வரவேண்டும். பிள்ளைகள் சிறுவராய் இருக்கையில் செய்யும் செயல்களுக்குப் பெற்றோரே உத்தரவாதிகள்.

ஆதலால் பெற்றோரே, உங்கள் பிள்ளைகள் பொய்சொல்லவும், களவெடுக்கவும், விக்கிரக ஆராதனைசெய்யவும் பயிலவிட்டால் நீங்களே உத்தரவாதிகள். தீமொழிகளைப் பாவித்தால் அதற்கும் நீங்களே உத்தரவாதிகள். தேசப்பிரமாணத்தை அவர்கள் மீறும்பொழுதும் நியாயஸ்தலத்தில் அவர்கள் குற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தத்துக்கு நீங்கள் உத்தரவாதிகளாய் இருக்கவேண்டியதுபோலத் தேவன் முன்பாக அவர்கள் பாலியப் பராயத்திற் காணப்படும் ஒவ்வொரு குற்றத்திற்கும் குறைவுகளுக்கும் நீங்களே உத்தரவாதிகளாய் வரவேண்டும். இதை உணர்ந்து தேவனுக்குப் பயந்து நன்மைசெய்ய உங்கள் பிள்ளைகளைப்பயிற்றுவீர்களாக.

பிள்ளைகள் தெய்வதிரவியம். பிதாமாதாக்கள் உக்கிராணக்காரர். தெய்வதிரவியத்தைச் செலவாக்க சாக்கிறதால் பிதாமாதாக்களாகிய நீங்களே உத்தரவாதிகள்.

•L. S.

## IN MEMORIAM.

## ஞாபக பத்திரம்.

கிறிஸ்தோபகாரியை வாசிக்கும் இஷ்டர்களுக்கு, காலஞ்சென்றுபோன கனம்பொருந்திய மார்சல். டி. சந்தர்ஸ் ஐயரவர்களின் ஞாபகக் குறிப்புக்குத் தகுந்த மரியாதையும் கனமுமாய், சுண்டிக்குளி சஞ்சுவாம் கோவிலிற்பண்ணப்பட்ட ஓர் பிரசங்கத்திலிருந்து பின்வரும் கவனிப்புகளை சில சிநேகிதருடைய கேள்விப்படி இவ்விடம் மொழிபெயர்த்துத் தருகிறோம்.

அவர் ஒரு மிஷனரியாக இத்தேசத்திற்கு வந்து சென்றுபோன இருபது வருஷக்காலமாக ஏற்பட்டு, விடாமுயற்சியுடனே மனமும் செயலுமொத்து நடப்பித்துவந்த அந்த ஏரே மகாபெரிய விஷயத்தில், உடன்வேலையாளும் துணைப்போர்வீரனுமாகிய நான், நாம் சம்பந்தப்பட்டிருக்கும் அந்த நிலைமையில் அவருடைய குணம் நடை, முயற்சி, தேவபத்தியாகிய இவைகளைப்பற்றி நிதானித்து அறியத்தக்க பல சமயங்கள் நேரிட்டன. தமது எசமானின் ஊழியத்தை நடப்பிக்கும்போது பள்ளிக்கூடங்களிலும், கிராமக்கூட்டங்களிலும், அநேகவருஷங்களாய் தாம் ஒரு எழுத்துக்காரியஸ்தனாக இருந்து நடத்திய வேதாகம சங்கத்திலும், சிறுபுத்தக சங்கக் காரியஸ்தர் கூடும்கூட்டங்களிலும், ஆம் எந்த இடங்களிலும் எப்போதும், அவரிலே மற்றவர்களிற் காணப்படாத பத்திவைராக்கியம், ஆத்துமநேசம், அவா இவற்றின்சாயல், நன்றாய் விளங்கிற்று. அவருடைய தேக பெலப்பையும் பழக்க இயல்பையும் பார்க்கும்போது "என்பிதாவுக்கடுத்தவைகளில் நானிருக்கவேண்டியதென்று அறியாதிருக்கிறீர்களா" என்று சொல்லுகிறவைகளாகப் பல குறிப்புகள் காணப்பட்டன இந்நாட்டிலுள்ள பாவிகளுக்குக் கிறிஸ்துயேசுவினால் வரும் இரட்சிப்பைக்காட்டும் சிவவாக்கை, தமக்கு காலம்வாய்த்தாலும் வாயாதிருந்தாலும் எப்போதும் பிரசங்கித்துக்கொண்டேயிருந்தார். தம்முயற்சிகளிலெல்லாம் பரோபகாரச்சிந்தையுள்ளவராகக் காணப்பட்டார்.

இப்பொழுது நாம் துக்கங்கொண்டாடிப் பிரலாபிக்கின்ற கனம்பொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருந்திய சாந்தர்ஸ ஐயரவர்களின் மரணத்தாலுண்டான நஷ்டம் சிறிதல்ல. இத்தேசத்தாரில், நல்வாக்கிலும், சற்கிருத்தியங்களிலும் இவர், சிரேஷ்டர், சேனைகளுடைய கர்த்தரின் இராணுவத்திலேற்பட்ட யுத்த சன்னத்தரில் இவர் வாடிக்கையான ஒருவரைப்போலஅல்ல. ஆனால் இவர் ஒரு சேனாபதி. தமது கடமையைச் செய்யப்பிரயாசப்பட்டவரன்றி, அதைச் செய்தும் முடித்தவர். சத்துருக்கள் அநேகரிருக்க இவரோ மடிந்தார். அவரோடு சமீபமாய்நெருங்கி வாழ்ந்தவர்கள், தங்களுக்கு உசிதப்பிரியரும், நம்பிக்கை, யதார்த்தம், யோக்கியமுள்ளவருமான ஒரு சகோதரனை இழந்தார்கள். இவருடைய அருமைப்பெருமைகளைப்பற்றி இவ்வூரார் அறியாதிருந்தாலும் தங்கள் அதி உத்தமநேசனும் தங்களில் அநுதாப சிந்தையுள்ளவருமான ஒருவரை இழந்துபோனார்கள். அம்மாத்திரமல்ல இத்தேசத்தாரின் ஆத்தும நித்தியவாழ்வை அதி உன்னத விருத்தியாக்குவதில் தமது சீவனைக்கொடுத்துத் தமது சீவவிருத்தாந்தத்தை மரணத்தால் சாட்சியிட்டு முத்திரித்த ஒருவரை இழந்துபோனார்கள். இந்தச் சஞ்சல சமாசாரத்தைத் தியானித்துக்கொள்ளுகிற நாம், கர்த்தாவே, சகாயம்பண்ணும், ஏனெனில், பத்திமான் ஒழிந்துபோகிறான். உண்மையுள்ளவன் மனுப்புத்திரரிலிருந்து அகன்றுபோகிறான் என்றே சொல்லுவோமாக.

சகோதரரே, அவருடைய ஓட்டம் முடிந்தது. பந்தய ஓட்டத்தில் குறித்த இலக்கைக் கிட்டிச்சேர்ந்தார். வெற்றி அவருக்குச் செயமாயிற்று, இராசாவோ தமது மோட்ச ஆலயத்தில் அவரைத் தேவையெனக்கண்டு, சிநேகிதனே, மேலே வாவென்றழைத்தார். அந்த அழைப்புக்கு அவர் உடனே கீழமைந்ததினால் நாம் குறைகூறுவோமா? அல்ல. குறைகூறாது சந்தோஷம் கொள்வோமாக. ஆம், ஒருஆத்துமா இரட்சிப்பை அடைந்தது. ஓர் சிநேகிதன் பரமண்டலஞ்சேர்ந்து அங்கே மோட்சகானம் பாடுகிறவர்களோடு கூடிக்கொண்டார். ஓர் ரத்தினம் இரட்சகரின் கிரீடத்திற் பதிக்கப்பட்டாயிற்று. ஓர் தொண்டன் தன் பிரயாசத்தை விட்டுநீங்கினர். ஓர் பரதேசி தன் பிரயாணத்தை முடித்தார். ஓர் போர்வீரன் யுத்தம்முடித்து இளைப்பாறுதல் அடைந்தார். கிரீடம் தரிக்கப்பட்டது, இதோ இவர் நித்திய ஆசீர்வாதம் பெற்றிருக்கிறதாக நாம் கம்பீர சந்தோஷங் கொள்வோமாக. ஆமென். ஆ! கர்த்தாவே, அப்படியே செய்வீராக, அப்படியே ஆகக்கடவது.

"தேவ தாசனே, நன்றுசெய்தாயே"
"யுத்தம் மகிமையாய் முடிந்ததே"
'போராட்டம்பண்ணிச் செயங்கொண்டாயே"
'முடிவில் தரித்தாய் கிரீடமே"

என்ற கீதத்தை அவரது சமாதியில் நினைப்பூட்டப்பத்திரமாய் வைப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## EXCELLENCY OF THE BIBLE.

### வேத மகத்துவம்.

கீர்த்தனை.

பல்லவி.

வேதாகமத்துக்கு மேலாகமமாக
வேறாகமங்களுண்டோ

அநுபல்லவி.

நீதமனதுடனு ராய்தவினூற் றோனும்
நிசமதென்பதைச்சொந்த நெஞ்சமதேகாணும்
நீடிரைக் கடலாடை சூழ்புவி
யூடுவேறினைநாடிடாத மெய்— வேதாக.

சரணங்கள்.

க. ஆதிபரன்சமைத்த அரியதனிமுதனூல்
அதுவே மனுடர் பாதைக் காகத்தரும் விதிநூல்
கோதற மானதக் கோட்டந்தீ ரேற்றநூல்
குணமன்றிக் குற்றமில்லாக் குருயேசு சாற்றுநூல்
சூது வஞ்சனை பொய்கள் சூரியன் முன்னிருள்போல்
தொலையுமேயதன் முன்னே சொலித்திடுஞ்சோதிநூல்
சத்தசத்திய தத்துவநூலது
பத்தர்தாமடை முத்திவழியதாம்— வேதாக.

உ. தேனையினியதென்பார் சீனிமதுரமென்பார்
திவ்வியவேதமதின் தித்திப்பறியாதார்
ஆன வெள்ளி பொன் முத்தை அரும்பொருளென்பாரே
ஆரணமதின் மாட்சியதனை யறிந்திலாரே
வானின்கீழ் அதோடொக்கின் மற்றெல்லாம் சூன்யமே
மண்ணுளோர்க்குக் கிடைத்த வானத்திரவியமே
மாட்சிமையவை யாவுமிசைந்தொரு
சூட்சமாயமை சூக்குமரூபாம்— வேதாக.

ங. தேவவயித்தியன்றான் செய்ததிருமருந்து
தீராப்பவவியாதி தீர்க்கும் திருமருந்து
பூவில் தனிமருந்து புகழத்தகு மருந்து
புசித்தோரி றவாமுத்தி புகப்பணு மோர்மருந்து
தாவி யெமை யழிக்குஞ் சாத்தானுற் கடியுண்டோர்
தாம் தப்பு வான் கிடைத்த சஞ்சீவினி கண்டீர்
சாட்சிவேண்டிவா ராய்ச்சிசெய்துப
ரீட்சையானீரே சாற்றுவீர்சொலோ— வேதாக.

ச. தேசம் பட்டினம் நாடு தீவு சிற்றூர்களில்
செப்பிடுமெட்டுதிக்கிற் சிறியவெண் கோணத்தும்
ஆசாரமுறையென்ன ஆக்கியநூல்களில்
ஆரணம் நாலெந்தென அலட்டுமெவைகளில்
காசினி மதித்திடுங் கலைநூல்கள் யாவற்றில்
கற்றோர் மதிக்கும் ஞானி கதறியபாடலில்
கர்த்தர் தம்மருள் பெற்றபத்தர்கள்
சொற்றநூலினு [illegible]— வேதாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## SUMMARY OF RELIGIOUS INTELLIGENCE

## சமாசாரத் திரட்டு.

Native Christian Alliance in Bombay.—வம்பாய்ச் சுதேசகிறிஸ்த ஐக்கசங்கம்.—சென்றுபோன மார்கழிமாதத்தில் வம்பாய்ச் சுதேசக் கிறிஸ்தவர்களுக்குள் தேவபத்தி, நல்லொழுக்கம், கல்வி, நம்பிக்கை, செல்வாக்கு என்பவைகளில் பேர்கொண்ட ஐந்துபேர் மேலேசொன்ன ஓர் சங்கத்தை ஸ்தாபிக்க முயன்று, மேற்கிந்தியாவிலுள்ள பற்பல பிரிவுகளைச் சார்ந்த கிறிஸ்தவர்களையும் இச்சங்கத்தின் அங்கத்தவராக்கும்படி விரும்பி, தங்கள் கையொப்பங்களிட்ட ஓர் அழைப்புப்பத்திரத்தை அங்கங்கே அனுப்பிவைத்தார்கள். இவர்களில் இருவர் ஸ்கொத்திலாந்தின் பிறித்தானிய செட்சுமிசியோனையும், ஒருவர் அங்கிலேய செட்சுமிஷியோனையும், மற்ற இருவரும் அமெரிக்கன் மிசியோனையுஞ் சேர்ந்தவர்கள். எந்தெந்தப் பிரிவைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாயிருந்தாலும் அவர்கள் ஒருவரோடொருவர் அறிமுகமாகி ஐக்கப்படவும், கிறிஸ்தவர்கள் கிறிஸ்து என்னுந் தலையுடன் இணைக்கப்பட்ட திருச்சபையாகிய சரீரத்தைச் சேர்ந்த அங்கங்களாகவே இருக்கிறார்களென்ற ஐக்கபந்தனத்தை உலகத்தவர்கள் அறியக்காட்டுதலும், கிறிஸ்தவர்களுக்குள் கிறிஸ்துமார்க்க சாரத்தைச் செறியப்பண்ணவும், அஞ்ஞானிகளுக்குள் கிறிஸ்துவின் இராச்சியத்தை விருத்தியாகச் செய்யவுந் தாங்கள் என்னசெய்யவேண்டுமென்று ஒருவரோடொருவர் உசாவுதலுமே இச் சங்கத்தின் நோக்கமாம்.

முன்சொன்ன ஐவருடைய அழைப்புக்கு இசைந்து மேற்கிந்தியாவின் பற்பல பகுதிகளிலுமுள்ள அந்தந்தச் சபையிலிருந்து 150 பேர் சபைப் பிரதிநிதிகளாக அனுப்பப்பட்டு பிறகிட்ட வைகாசிமாதம் ௨௧ ந் திகதி வம்பாயிலே கூடினார்கள். அவர்களில் 17 பேர் சுதேச போதகர். அவர்கள் பற்பல பிரிவுகளைச் சேர்ந்த கிறிஸ்தவர்களாயிருந்தாலும், அறிவு, உத்தியோகம், மேன்மை இவைகளில் வித்தியாசமுள்ளவர்களாயிருந்தாலும் யாதொரு பின்னபேதமின்றி எல்லாருங் கிறிஸ்துவில் ஒற்றுமையைக் காண்பித்தார்கள். நெடுங்காலமாய்த் தளராமுயற்சியுடன் கிறிஸ்துவின் தொண்டை நடப்பித்துவந்த நரைதிரைகொண்ட சில முதியோரும், அதிக சாக்கிரதையுடன் இப்பொழுது அத்தொண்டை நடப்பிக்கும் ஆடவரும், அத்தொண்டுக்கு ஆயத்தப்படும் வாலிபருமேயன்றிக் கமக்காரர்களும், பண்டிதர்களும், கிறிஸ்துவினிமித்தம் சிறைச்சாலையில் அடைபட்டிருந்து விடுதலைபெற்றோரும், கிறிஸ்தவர்களானபோதே கிறிஸ்துவினிமித்தம் தங்கள் ஆஸ்தி முழுவதையும் பறிகொடுத்தோரும் அவ்விடத்தில் அவர்களுக்குள்ளிருந்தார்கள். குசாரவதி, மராஷ்டம், கன்னரம், இந்துஸ்தானி என்னும் நாலு விசேஷித்த பாஷைக்காரர் அவர்களுக்குள்ளிருந்தார்கள்.

இப்படிப்பட்ட சங்கத்தை முதல்முதல் ஸ்தாபிக்கத் துவங்கினவர் பிறப்பின்படி ஒரு பார்சியன். அவர் 1839 ௵ கிறிஸ்தவனானதினால் அப்பகுதியிலுள்ள நெடுநாட்பட்ட கிறிஸ்தவர்களுக்குள் அவரும் ஒருவர். அவர் வம்பாயிலுள்ள ஸ்கொத்சு மிசியோனைச்சேர்ந்த ஒரு சபையின் போதகர். அவர் அங்கிலேயபாஷைகளில் அதிக தேற்றங்கொண்டவராயும், நாலு வித்தியாசமான பாஷையில் பிரசங்கிக்கத் திராணியுடையவராயும் இருக்கிறார். இவரே அவ்வைக்க சங்கத்தலைவராகத் தெரிவுசெய்யப்பட்டார். அவர் உடனே எழுந்து சங்கத்தவரும் ஆம் அவர் பேசிய பாஷையை விளங்காதவர்கள்தானும் கண்ணீர்சொரியத் தக்கதான ஓர் சாதுரிய பிரசாரணத்தைப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேசிக் கிறிஸ்துவின் சிலுவைக்கொடியை உயர்த்திக் கிருபாசனத்தண்டை சேர்ந்து பிரார்த்தனைசெய்தார்.

கிறிஸ்து தேவனாயிருந்தும் மனுஷ அவதாரம்பண்ணிய இரட்சகராயிருக்கிறாரென்பதையும் விவிலிய வேதமொன்றே தேவவாக்காயிருக்கிறதென்பதையும் விசுவாச அஸ்திபாரமாகக்கொண்டு இச்சங்கம் ஸ்தாபிக்கப்பட்டது.

இச்சங்கத்தவர் அடுத்தடுத்து நாலுதினங்களில் கூட்டம் வைத்தார்கள். இக்கூட்டங்களில் சுதேசக் கிறிஸ்தவர்களின் பிள்ளைகளை வளர்ப்பதைப்பற்றியும், ஒழுங்காய்த் தருமங் கொடுக்க வேண்டுமென்பதைப்பற்றியும், கிறிஸ்தவர்கள் தங்கள் தேசத்தாருக்குச் செய்யவேண்டிய பிரதான கடமைகளைப்பற்றியும், வேறும் விசேஷித்த பல விஷயங்களைப்பற்றியும் பேசினார்கள். தங்கள் தேசத்தாருக்குச் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றிப்பேசினபோது இச்சங்கத்தவர் ஓர் மிஷியோனைப் புதிதாய் ஸ்தாபிக்க வேண்டுமென்ற நிர்ணயத்தையும் உடனே நாட்டி, அந்நேரமே அம்மிஷியோனின் முதல்வருடச் செலவுக்கு 450 ரூபாயுங் கையொப்பமூலமாகச் சேகரித்து வம்பாய்க்குத் தெற்கே 200 மைல் தூரத்தில் கடற்கரையோரமாயிருக்கும் இரத்தினகிரி என்னும் பட்டினத்தை இந்த மிஷியோன் ஸ்தானமாகவுந் தெரிவுசெய்தார்கள். இவ்வண்ணம் பற்பல பிரிவுகளைச்சேர்ந்த கிறிஸ்தவர்களுங் கூடி ஒரு மிஷியோனை ஆரம்பிக்கிறதில் காட்டின கரிசனையும், முயற்சியும் எவர்க்கும் அதிக பிரீதியைக் கொடுக்கத் தக்கதாய் இருந்தன. ஆமெட் நகரத்திலிருந்துவந்த சில கிறிஸ்தவர்கள் பாடிய ஞானகீர்த்தனையைக் கேட்கிறதில் அன்றுசாயந்தரம் கொஞ்சநேரங்கழித்தார்கள். அவ்வப்பியாசம் கிறிஸ்தவர்களுக்கும் மற்றும் அஞ்ஞானிகளுக்கும் அதிகஇதமாயிருந்தது.

அக்கூட்டத்தில் பூமியின் நாலு கண்டங்களிலும் இருந்துவந்த எட்டுப்பத்து வித்தியாசமான பாஷைக்காரர் இருந்தார்கள். அன்று சாயந்தரம் அவ்விடத்திலிருந்த 17 சுதேசபோதகரும், ஒரு அன்னியோன்னிய பிரார்த்தனைக்கூட்டம் வைத்துப் பற்பல காரியங்களையும் எடுத்துப் பேசிப் பிரார்த்தனை செய்துகொண்டிருக்கும் வேளையில் ஒரு மணித்தியாலம் ஒரு கணப்பொழுதுபோல நேரம் பறந்துவிட்டது. அந்நேரத்திலும் ஒரு போதகர்,

“நாங்கள் கையிடுங் காரியங்களில் உடனே நேரே அநுகூலமுண்டாகுமென நம்பிக் கிரியைசெய்யவேண்டும்.”

“ஐக்க பிரார்த்தனைச்சங்கம் ஒன்று ஸ்தாபிப்பது அகத்தியம்” என்னும் இரண்டு காரியங்களை மனதில் பதியத்தக்கதாய்ப் பேசி அவர்களை ஏவினார். பின்னொரு தருணத்தில் ஒருவர் “இந்தியாவிலுள்ள கோடிக்கணக்கான குடிகளுடன் இங்கே கூடியிருக்கும் 150 பேர் சேர்ந்த இச்சிறுச்சங்கத்தை ஒப்பிட்டுப்பார்க்கையில் இது மிகச் சிறிதுதான். ஆயினும் இச்சிறுக்கூட்டத்தின் சற்கிருத்தியங்களிலுள்ள தைரியமும் பெலமும் இந்தியா முழுவதிலுமுள்ள கோடிக்கணக்கான சனங்களுக்குள்ளிருக்கிறதிலும் அதிகம்” என்றார்.

ஆத்துமாக்களைக் கிறிஸ்து இரட்சகரண்டைக்கு இழுத்துக்கொள்ள வேண்டும் என்பதில் யாவரும் ஒன்றித்த நோக்கத்துடனும் பேராசையுடனும் பேசினார்கள்.

கடைசியாக இவ்வைக்கசங்கத்தார் மூன்றுமாசத்துக் கொருமுறை அந்தந்த ஸ்தானங்களிலும் வருஷமொருதரம் எல்லாரும் கூடி ஓரிடத்திலும் கூட்டங்கள் வைக்கத் தீர்மானித்துக்கொண்டார்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Spain.—ஸ்பானியா.—ஸ்பானியாவில் சுவிசேஷ பிரபலியம் விருத்தியடைந்து வருகிறது. மாதிரித், வல்லாடலிட், கொர்டோவா, சிவில், காடி, காதேசிநு, பாசெலோநு, (Madrid, Valladolid, Cordova, Seville, Cady, Carthagena and Barcelona) என்னும் நகரங்களில், புரோத்தெஸ்தன் கிறிஸ்த ஆராதனைகள் நிலைப்பட்டிருக்கின்றன. சனங்கள் வேதவாக்கியங்களையும் மற்றும் புத்தகங்களையும் வாங்கப் பேராசைகொள்ளுகிறார்கள். சத்திய உபதேசங்களை வீட்டுக்குவீடு கொண்டுபோகச் சுதேச உதவிக்காரர் மெத்தத்தேவை. அவர்கள் வேதபோதக வித்தியாசாலைகளிற் படிப்பிக்கப்பட்டவர்களாயிருக்கவேண்டும். அவ்வித்தியாசாலைகளை ஸ்தாபித்துத் தாபரிக்கப் பண உதவி அதிகம் வேண்டியதாயிருக்கிறது. பாசெலோநு (Barcelona) விலிருந்து ஓர் சுவிசேஷகன் எழுதுகிறதாவது: "இந்த இடத்துப் பிள்ளைகளுக்குள்ளே எங்கள் அலுவல் நயந்துபோகிறது. நாங்களாகச் சனங்களைப்போய்ச் சந்தியாதிருந்தும், பள்ளிக்கூடங்களுக்கு உங்கள் பிள்ளைகளை அனுப்புங்களென்று சொல்லாதிருந்தும், பெற்றோராக எங்களிடம் வந்து தங்கள் பிள்ளைகளைப் படிப்பிக்கச்சொல்லி நெருக்குகிறார்கள். ஐசுவரியவான்கள் தங்கள் பிள்ளைகள் ஏழைகளுடைய பிள்ளைகளுடன் கலந்துகொள்வதைத் தடைசெய்யவுமில்லை. அவர்களில் அநேக பிள்ளைகள் பள்ளிக்கூடப்புத்தகங்களுடன் சுவிசேஷப்பிரதிகளையும் எங்களிடத்திற் கொண்டுவருகிறார்கள். எங்கள் ஞானகீதங்களில் அவர்களுக்கு இரம்பின ஆசை. நாங்கள் தெருக்களிலே போகிறபொழுது பிள்ளைகள் ஞானகீதங்களைப் பாடக் கேட்பது எங்களுக்கு மனம் பொங்கிய சந்தோஷம்" என்பதே.

சிவில் (Seville) என்ற இடத்திலிருந்து பின்னொருவர் 'எங்கள் சபையாருடைய பிள்ளைகளுக்கு வேத அறிவை ஆழமாய்க் கற்றுக்கொடுப்பதுதான் எனது நோக்கம். எங்கள் சபைகளில் ஆயிரக்கணக்கானவர்கள் சேர்ந்தும், சபையாருடைய பிள்ளைகளே பிற்காலத்தில் சபைகளை ஸ்திரப்படுத்துகிறவர்களானபடியால் அவர்களை வேதபோதனைகளில் வேரூன்றச் செய்வதினால் சபையின் சுத்தசீரையும் இரத்தையும் நிலைநிறுத்தலாமென நம்பிக் கிறிஸ்த பிள்ளைகளைப் படிப்பிக்கும்படி உபாத்தி, உபதேசிமாரை அதற்கென்றே பயிற்றி வருகிறேன்" என்றுஞ் சொல்லுகிறார்.

France.—பிரான்சு.—பிராஞ்சிய சிங்காசனத்தில் பூர்பென் (Bourbon) இராசகுடும்பத்தாருக்கு உரித்தில்லையென்று பிராஞ்சியர் பண்ணிய தீர்ப்பைக்கேட்டுப் பாப்பும் அவன் ஆட்களும் கலங்குகிறார்கள். பாப்பு கொஞ்சக்காலத்துக்காவது பிராஞ்சிலே அடைக்கலமாயிருந்து ஒரு புதிய சேனையோடு உரோமாவுக்குப் போகலாமெனக் காத்திருந்தார். அந்த நம்பிக்கையும் முன்சொன்ன இராசகுடும்பத்தாருக்கு உண்டான தீர்ப்புடன் அற்றுப்போயிற்று.

பிராஞ்சிய கவ்வைகாரியங்களுக்கு இப்பொழுது தலையாய் நிற்கும் எம். தியர்ஸ (M. Thiers) என்பவர் பாப்புவுக்குப் பிராஞ்சிலே புகலிடங் கொடுக்க மறுக்கிறார். அவர், பிராஞ்சியர் போருண்டாகத்தக்கதாய் ஒன்றுஞ்செய்யாதிருக்கவேண்டுமென்றும், இனிச் சமாதானமாய்ச் சீர்திருந்தியிருக்கிறதே அரசாட்சிக்குமுறைமையென்றும், இத்தாலியரை விரோதப்படுத்தத்தக்க ஒன்றையும் பிராஞ்சியர் செய்யாதிருக்கவேண்டுமென்றும் சொல்லுகிறார்.

பாப்பு தன்பட்சத்தவர்க்கு எழுதியகடிதமொன்றில் "என் அருமையான

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகோதரரே, நாங்கள் இப்பொழுது தெய்வகடாட்சத்தின் கீழிருக்கிறோம். மனுஷர் ஒரு விஷயத்திலாவது நமக்கு உதவுவார்களென்று காத்திருக்க இடமேயில்லை. மனுஷர் முற்றாய் நம்மை விட்டுவிட்டார்கள். நாங்கள் உண்மையை மறைக்கிறதினால் என்ன பலன். அரசரும், அதிபதிகளும் தாங்கள் பண்ணிய வாக்குத்தத்தங்களை மறந்து எங்கள் ஆபத்தில் எங்களை விட்டார்கள். எத்திசையிலிருந்தாவது நமக்கு உதவி இனிக்கிடையாது. எல்லாநம்பிக்கையும்போயிற்று. பிராஞ்சியர் உதவுவார்களென்று நீங்கள் சொல்வீர்கள்போலே, பிராஞ்சியர் ஒன்றுஞ் செய்யக்கூடாமற்போயிற்று. துக்கந்தான். எல்லாநம்பிக்கையும் அற்றன. நாங்கள் தப்புகில் அது ஒரு அற்புதமாய் வரவேண்டும். நாங்கள் சருவவல்ல தேவனண்டைக்குத் திரும்பி அவரிடத்தில்மாத்திரமே எங்களை இரட்சிக்கக் கெஞ்சிக்கேட்போமாக." என்று சொல்லுகிறார். சென்ற பிராஞ்சிய புருஷிய யுத்தங்களில் ஏற்பட்டிருந்தவர்களுக்குள்மாத்திரம் வேதாகம சங்கத்தார் ஏறக்குறையப் பத்திலட்சம் வேதபுத்தகங்களைப் பகிரங்கம்பண்ணினார்கள். பிறகிட்ட 1830 ம் ஆண்டில் பாரிஸ் இராசதானியில் ஆறுஏழு புரோத்தெஸ்தன் ஆலயங்களில் ஆராதனை நடந்தது. இப்பொழுது அவ்விடத்தில் 42 கோவில்களுண்டு. சென்ற போர்க்காலங்களில் அக்கோவிற் கதவுகளெல்லாந் திறந்தவண்ணமாயும் ஆராதனைகள் நடந்தவண்ணமாயும் இருந்தன. சனங்கள் அதிக திரளாயும் நெருக்கமாயும் வந்தார்கள். இவ்வகையே பிராஞ்சில் நம்பிக்கைக்கிடமில்லாது சத்தியத்தைக் கேளாமல் அடைபட்டிருந்த அனேகர் உள்ளங்களில் சுவிசேஷ சத்தியங்கள் உட்சென்று பதிதற்கு இடமாயிற்று.

Russia—ருசியாவில் மார்க்க சுயாதீனம்.—இந்நாட்களில் சுவிசேஷவிருத்தி ஐக்கசங்கத்தின் அமெரிக்கன் கிளைச்சங்கத்தார் ருஷிய சக்கிரவர்த்தியண்டைக்குச் சில ஒற்றாட்களை அனுப்பி, பால்றிக்கடற்கரைமாகாணங்களிலுள்ள கிறிஸ்தவர்களுக்குண்டான துன்புறுத்தலைத்தடுக்கவும், ருசிய ஆளுகை ஸ்தலங்களை அடுத்திருக்கும் மகமதியரான துருக்கிய அரசாட்சிக்குக் கீழான நெஸ்தோரியர் ஆர்மீனியர் முதலானோருக்குக் கிரேக்க சபையாரைப்போல, ஆராதனையிலும், போதனைவிஷயத்திலும் தன்னிஷ்டங்கொடுக்கவும் [illegible]ப்பேசுவித்தார்கள்.

அவ்வொற்றாட்களை ருசியசக்கிரவர்த்தியின் மகாமந்திரியாகிய கொற்சகோவ் (Gortschakoff) அதிபட்சத்துடன் உபசரித்து அவர்கள் கொடுத்த மனுப்பத்திரத்தை வாசித்துத் தன் சக்கிரவர்த்தியாகிய ஸா (Czar) அவர்கள் சொல்லிய காரியங்களின்பேரில் அனுதாபமுள்ளவராய் இருக்கிறாரென்றும் சம்பீற்றர்ஸ்பேக் (St. Petersburgh) என்னும் இராசதானிக்கு அவர் வரும்பொழுது அவர்கள் மனுக்கேட்ட காரியங்கள் கவனிக்கப்படுமென்றும் ருசியாதேசமெங்கும் மார்க்க சுயாதீனமுந் திருத்தமுமுண்டாக இடங்கிடைக்குமென்றும், கிரேக்கசபையாரையும் புரோத்தெஸதாண்டரையுஞ் சரிவர நடத்துவதும், புரோத்தெஸதாண்டருக்கு விரோதமாயிருக்கும் பிரமாணங்களை ஒழிப்பதும், சக்கிரவர்த்தியின் கருத்தென்றும் சொன்னார். அதுவுமன்றி ருசியருக்குள் கிறிஸதவர்களாகிறவர்களைச் சைபீரியாவுக்கு ஏற்றுந் தண்டனையும் அவர்களுக்கு ஆலோசனைச்சங்கத்தார் விதித்த மற்றெவ்வித தண்டனைகளும் விலக்கப்படுமென்றும் சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LIGHT IN THE DWELLING

## வாசஸ்தான ஒளி.

லூக்கா 1 : 5—14. வசனங்களை வாசி.

---

### தேவதூதன் சகரியாவைச் சந்தித்தல்.

லூக்கா ஆதிமுதலுள்ள எல்லாக் காரியங்களையும் பூரணமாய் உணர்ந்தவர் போலத் தாமெழுதிய சுவிசேஷத்தின் முகவுரையிற் சொன்னார். யேசுவானவரின் உற்பத்திக்கு முன் நிகழ்ந்த காரியங்களையும் அவர் விபரித்துச் சொல்லியிருக்கக் காண்கிறோம்.

யோவான் ஸ்நானன் யேசுவானவர்பிறக்க ஆறுமாதங்களுக்குமுன் பிறந்தான். லூக்கா முதலாம் அதிகாரத்தில் அவனுடைய சென்ம விருத்தாந்தங்களைக் காண்கிறோம். அவன்பிதா சகரியா என்னப்பட்ட ஆசாரியன் அவன் மாதாவாகிய எலிசபேத் ஆரோன் வமிசத்து ஆசாரிய குடும்பத்தாள்.

சகரியாவும் எலிசபேத்தும்தேவனுக்குமுன் நீதியுள்ளவர்கள். "நீதிமான் ஒருவனுமில்லை" என்று வேதவாக்கியங்களிற் சொல்லப்பட்டிருக்க, இவ்விருவரும் எவ்விதமாய் நீதியுள்ளவர்களாய் இருக்கக்கூடும்? ஒருவன் கிறிஸ்துவில் விசுவாசிக்கிறபொழுது கிறிஸ்துவிலுள்ள நீதி அவனுக்கு உரித்தாகவே அவனும் நீதிமானாகிறான். அவருடைய நீதி நம்முடையதாய் வரும்படி அவரே நமது பாவங்களைச் சுமந்தார். யேசுவானவர் இவ்வுலகத்தில் உற்பத்தியாகமுன்னல்லவா இவ்விருவரும் இருந்தார்கள். பின்னை அவர்கள் எப்படிக் கிறிஸ்துநாதரில் விசுவாசிக்கலாமென்று கேட்கில்; மெய்தான் அவர்கள் கிறிஸ்துவுக்கு முன்னிருந்தார்கள்; ஆயினும் ஒரு இரட்சகர் வருவாரென்ற வாக்குத்தத்தத்தை அவர்கள் விசுவாசித்து அவ்விரட்சகரிலுள்ள நீதியிற் பங்குபெற்றார்கள். அவ்வண்ணமே ஆபிரகாமும் நீதியுள்ளவனானான்; அவன் யெகோவாவில் விசுவாசம்வைத்தான். அதை அவர் அவனுக்கு நீதியென்றெண்ணினார். (ஆதி. 15 : 6.)

மெய்விசுவாசம் கீழ்ப்படிதலை உண்டாக்குகிறதால் சகரியாவும் எலிசபேத்தும் விசுவாசிகளாகிக் கற்பனைகளுக்குக் கீழமைந்தார்கள். அவர்கள் பாவமில்லாதவர்களென்று கருதவும்படாது. பாவமில்லாதவன் ஒருவனுமில்லை. ஆனால் அவர்கள் மனசார எந்தப்பாவத்திற்காவது இடங்கொடுக்கவில்லை. அவர்கள் வஞ்சகரைப்போல லேசான கற்பனைகளைக் கைக்கொண்டு வருத்தமானவைகளை அசட்டைபண்ணினதுமில்லை. கர்த்தர் அருளிய எக்கற்பனையிலும் அவர்கள் குற்றமற்றவர்களாகவே நடந்தார்கள். ஆயினும் இன்னும் அவர்கள் பாவத்திலே அகப்படக் கூடியவர்களாயிருந்தார்களென்று காண்கிறோம். தேவதூதன் சொன்னதைச் சரியாய் விசுவாசிக்கவில்லை.

இந்தச் சகரியாவுக்கும் எலிசபேத்துக்கும் முன்னே பிள்ளைகளில்லாதிருந்தும் உலகத்திலே இதற்குமுன் தோன்றினவர்களுக்குள் பெரிய தீர்க்கதரிசி அவர்களிடம் பிறந்தான்.

சகரியா ஒரு ஆசாரியனாயிருந்தபடியால் யெருஷலேம் தேவாலயத்தில் காலாகாலங்களில் தூபங்காட்டுதல் அவன்தொழிலாயிருந்தது. ஆசாரியர் அனேகராயிருந்தபடியால் அவர்களெல்லாரும் யெருஷலேமில் வசிக்கக்கூடாது. அவ்வாசாரியர் எல்லாரும் இருபத்துநான்குவகுப்பாய்ப் பிரிக்கப்பட்டிருந்தார்கள். ஒவ்வொருவகுப்பாரும் ஒருவாரத்துக்குத் தேவாலயத்தொ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ண்டை நடத்த முறைமுறையே யெருஷலேமுக்குப் போகவேண்டும். அந்தந்த ஆசாரிய வகுப்பைச் சேர்ந்தவர்களில் ஆருக்கு ஆலயத்துத் தூபவேதிகையில் தூபங்காட்டும் சலாக்கியமுடையதென்று அறியும்படி ஒவ்வொருநாட் காலையில் ஒவ்வொரு ஆசாரியவகுப்பாரும் கூடிச் சீட்டுப்போடுவார்கள். அந்தச்சீட்டு ஆர்மேல்விழுமோ அவனே அந்தநாட் காலையிலும் மாலையிலும் தேவாலயத்துட்சென்று தேவனுக்கு நைவேத்தியமாகத் தூபங்காட்டுவான். அந்நேரத்திற் சனங்களெல்லாரும் தேவாலயப் பிராகாரத்தில் நின்று தேவன் தமது ஆசீர்வாதங்களை எல்லார்மேலுஞ் சொரியும்படி வெளியரங்கப் பிரார்த்தனை செய்வார்கள்.

தேவன் சகரியாவுடன் பேசநினைத்த அன்றைத்தினமோ சீட்டுச் சகரியாவின்பேருக்கு விழப்பண்ணினார். பாருங்கள் ஒவ்வொரு அற்பகாரியத்தையும் தேவனே நடத்துகிறார். அவ்வற்பத்திலிருந்து பெரியபெரிய காரியங்கள் தோன்றச் செய்கிறார் எனத்தெரிகிறது.

தேவதூதன் தூபவேதிகைக்குச் சமீபமாய் நிற்கக்கண்டு சகரியா கலக்கமடைந்தான். ஆனால் அவன் பயப்பட முகாந்தரமிருந்ததில்லை. பரமதூதன் அவனை அழிக்கவல்ல அவனை ஆசீர்வதிக்கவந்தான். "உன் விண்ணப்பம் அங்கீகரிக்கப்பட்டது" என்றுசொன்னான். சகரியா தனக்கு ஓர் புத்திரன் கிடைக்கவேண்டுமென்றோ அல்லது உலகத்தில் வரவேண்டிய இரட்சகர் அதி சீக்கிரம் தோன்ற வேண்டுமென்றோ பிரார்த்தித்தான். இவ்விரண்டு ஆசீர்வாதங்களும் கொடுக்கப்பட்டன. மனுஷருக்கு அருளப்பட்ட அந்த இரட்சகரின் வழியை ஆயத்தப்படுத்த ஓர்புத்திரன் சகரியாவிடத்திற் பிறக்க இருந்தான்.

தேவதூதன் சகரியாவைநோக்கி, உனக்குச் சந்தோஷமும் அக்களிப்பும் உண்டாகுமென்றான். இப்பெயர்ப்பட்ட ஓர் புத்திர உற்பத்தியில் அப்புத்திரனைப் பெற்ற பிதாமாதாவுக்கு அக்களிப்புண்டாகுந் தான். சகரியாவின் புத்திரனுக்கு இட்டநாமமும் தேவன் அவனை ஆசீர்வதிக்கச் சித்தமானார் என்ற கருத்துடையது. யோவான் என்னுஞ் சொல்லுக்குத் தேவானுக்கிரகம் என்பது பொருள். நானாவித தீமைகளையுஞ் செய்து தங்கள் பெற்றார் உள்ளங்களை ஊடுருவக்குத்தின அநேக பிள்ளைகளுடைய உற்பத்தியிலும் அக்களிப்பிருந்தது.

காயீன் பிறந்தபொழுது ஏவாளும் சந்தோஷித்து அவன் எப்படிப்பட்ட தீயனாய் வருவானென்று கவனியாது "யெகோவாவினால் ஒரு புத்திரனைப் பெற்றேன்" என்றாள்.

பெற்றார் விரும்பாதிருக்கும்பொழுதுதானும் பிள்ளைகள் பிறந்தார்கள். அவர்களிற் சிலரோ தங்கள் பெற்றார் உள்ளங்களைக் களிக்கச் செய்யவும் அநேக ஆத்துமாக்களை நித்திய தண்டனையிலிருந்து இரட்சிக்கவும் சீவித்தார்கள். புதிதாய்ப் பிறந்த ஒரு பாலனை நாம் காணும்பொழுது அப்பாலன் எப்படிப்பட்டவனாவானென்று சொல்லக்கூடாதிருந்தும் அந்தப்பிள்ளை பெற்றோருக்கும் பிறருக்கும் சாபமாயல்ல, ஆசீர்வாதமாய் வரப்பண்ணும்படி அதற்காகத் தேவனைநோக்கி ஆவலுடன் பிரார்த்திப்போமாக.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org